Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்பு கொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency post Office
303, K.K.S.ROAD JAFFNA T.P.021 - 22 2670
FAX - 222 3214 email-del-srnskr @ evreka.lk
(சி.1136)

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆவணி 19 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றஜப் 07 (05.09.2003) வெள்ளிக்கிழமை இதழ்: 336

# இடைக்கால நிர்வாகம் குறித்த திட்டவரைவு

# தலைவரின் ஆலோசனையின் பின் அரசுக்கு!

## வன்னி திரும்பிய தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்டவரைபு, தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனுடன் ஆராய்ந்த பின்னர் நோர்வே ஊடாக அரசாங்கத்துக்கு அனுப்பப்படும்.**

**- இவ்வாறு நேற்று வன்னி திரும்பிய தமிழீழ அரசியற்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் செய்தியாளர் மத்தியில் பேசும்போது தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாம் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் சர்வதேச சட்ட நிபுணர்கள் மற்றும் இது சம்பந்தமான துறைசார் வல் லுநர்களுடன் எமது திட்ட வரைபு சம்பந்தமாக ஆராய்ந் துள்ளோம். அடுத்து நாம் தேசியத் தலைவருடன் கலந்துரையாடி அவரது ஆலோசனையின்கீழ் அத்திட் டம் முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட்டு, நோர்வே ஊடாக அரசாங்கத்துக்கு அனுப்படும் எனத் தெரிவித்தார்.

தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நேற்று விமானப்படைக்குச் (10 ஆம் பக்கம் பார்க்க)


வன்னி திரும்பிய தமிழ்ச்செல்வன்


மட்டு. திரும்பிய கருணா அம்மான்

## இடைக்கால நிர்வாகம் குறித்து ஆராய உடனடியாகப் பேச்சு ஆரம்பிக்கப்படும்!

### அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு



விடுதலைப் புலிகளால் அரசுக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ள இடைக்கால நிர் வாக வரைவினை பரிசீலனை செய்வதற் கும் அது தொடர்பாக விவாதிப்பதற்கும் அடுத்த கட்ட சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்க விரும்புவதாக அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தையை இத் தாலியில் அல்லது ஜெனீவாவில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஐரோப்பிய அமைப்பின் தலைமைப் பொறுப்பைத் தன்னகத்தே வைத்திருக்கும் இத்தாலி, தனது நாட்டில் பேச்சுவார்த்தையை நடத்த அழைப்பு விடுத்துள்ளது. ஏற்கனவே சுவிற்சர்லாந்து அரசு, பல நாடுகளின் சட்டஅமைப்புத் தொடர்பான சந்திப்புகளுக்குப் பெயர்பெற்ற ஜெனீவா நகரில் அடுத்தகட்டப் பேச்சு வார்த்தைகளை நடத்தும்படி அழைப்பு விடுத்திருந்தது. இந்த இரு தளங்களில் ஒன்றை சர்வதேச பேச்சு வார்த்தை அனுசரணையாளர்கள் தேர்ந்தெடுப்பார்கள்.

பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் கடந்த வாரம் சர்வதேச சட்ட வல்லுநர்களையும் அரசியல் மேதை களையும் சந்தித்து, (10 ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருட்களின் விலை நேற்று முதல் அதிகரிப்பு!

(கொழும்பு)

எரிபொருட்களின் விலை நேற்று நள்ளிரவு முதல் மீண்டும் அதிகரிக் கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒரு லீற்றர் பெற்றோ லின் விலை இரண்டு ரூபாவாலும், ஒரு லீற்றர் டீசலின் விலை ஒரு ரூபா 50 சதத்தாலும், மண்ணெண் ணெயின் விலை ஒரு ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

புதிய விலைகளின்படி -

லீற்றர் 52 ரூபாவாக இருந்த ஒக்ரொன் 90 ரகப் பெற்றோல்- 54 ரூபாவாகவும், ஒரு லீற்றர் 55 ரூபா வாக இருந்த ஒக்ரின் 95 ரகப் பெற்றோல் - 57 ரூபாவாகவும், லீற் றர் 30 ரூபாவாக இருந்த லங்கா ஓட்டோ டீசல் - 31 ரூபா 50 சதமாக வும், லீற்றர் 35 ரூபா 30 சதமாக (10 ஆம் பக்கம் பார்க்க)


கொழும்பு வந்த இங்கிலாந்து கொன்சர்வேட்டிவ் கட்சியின் உதவித் தலைவரான மைக்கல் அன்கிராம் தலைமையிலான குழுவினரை, கொழும்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மூத்த தளபதி கேணல் கருணா அம்மான் ஆகியோர் சந்தித்துக்கொண்டபோது எடுக்கப்பட்ட படம்.

### பேச்சுகள் ஆரம்பித்த ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு

## அரசு - புலிகள் பிரதிநிதிகள் சந்திப்புக்கு நோர்வே முயற்சி!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் - சிறி லங்கா அரசுக்குமிடையே ஆரம்ப மான சமாதானப் பேச்சு வார்த்தை யின் ஒருவருடப் பூர்த்தியை முன் னிட்டு, இரு பகுதியினரும் ஒன்றாக நினைவுகூருவதற்கான ஏற்பாடு ஒன்றை, இலங்கை வரும் நோர்வேக் குழுவினர் ஏற்பாடு செய்யவுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் பதினேழாம் திகதி இலங்கை வரவுள்ள நோர்வே நாட் டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரே, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு வினருடன் இணைந்து இந்த ஏற்பாட் டைச் செய்யவுள்ளனர்.

மூன்றுநாள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வரும் இவர் கள் - பிரதமர் ரணில் விக்கிரம சிங்க, அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் உட் படப் பலரைக் கொழும்பில் சந்திப் பதுடன், கிளிநொச்சி வந்து சு.ப. தமிழ்ச்செல்வனையும் சந்திக்கவுள்ள தாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில்

## படையினர் இரவு நேரங்களில் குடியிருப்புக்குள் செல்லத் தடை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கில் - மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்குள், இரவு 7 மணியின் பின் படையினர் செல் வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள தாக படை அதிகாரி தெரிவித்தார்.

அண்மைக்காலமாக, வடமராட்சி கிழக்குப் பகுதியில் படையினர் பாலியல் பலாத்கார நடவடிக்கை யில் ஈடுபட்டிருப்பது தொடர்பாக, அப்பகுதி மக்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரி விக்கப்பட்டது.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் குடியிருப்புப் பகுதியில் படையினர் எந்தச் சந்தர்ப்பத்திலும், கிராமங்களுக்குச் செல்ல அனுமதி (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



இரவில் மட்டுமல்ல பகலிலும் ஊருக்குள்ள உவைக்கு என்ன வேலை...?

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
(சி -1139)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

# ஆயிரம் பட்டதாரிகளுக்கு விரைவில் ஆசிரிய நியமனம்

## கல்விப் பணிப்பாளர் தகவல்

(கொழும்பு)

தமிழ்மொழிமூல வெற்றிடங்களை நிரப்பும் வகையில், ஆயிரம் பட்டதாரிகளுக்கு விரைவில் ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளது. இதற்கான அனுமதியை திறைசேரி வழங்கியுள்ளதாக, தேசியப் பாடசாலைகளின் பிரிவின் கல்விப் பணிப்பாளர் எச்.பி.கீகனகே தெரிவித்துள்ளார்.

ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம், விவசாயம் ஆகிய பாடங்களை கற்பிப்பதற்கான பட்டதாரி ஆசிரியர்களுக்கே அதிகளவில் வெற்றிடங்கள் நிலவுகின்றன.

தென்மாகாணம், வடக்கு - கிழக்கு மாகாணம், மத்திய மாகாணம், சப்பிரகமுவா மாகாணம் ஆகியவற்றில் உள்ள, தமிழ்மொழி மூல தேசியப் பாடசாலைகளுக்கே, பெருமளவு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது எனவும் தெரிவித்தார்.

அண்மையில் நியமிக்கப்பட்ட ஆசிரியர் நியமனங்களில் - தேசியப் பாடசாலையில் எதுவித நியமனமும் வழங்கப்படாததைச் சுட்டிக்காட்டிப் பேசிய கல்விப்பணிப்பாளர், தேசிய பாடசாலைகளிற்கு ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

ஆசிரிய நியமனங்களுக்கான விண்ணப்பப்படிவம், பொதுச்சேவை ஆணைக்குழுவின் ஊடாக விரைவில் கோரப்படவுள்ளது.

## நேற்றுமுன்தினம் வீரமுரசு நிகழ்வு!

நேற்றுமுன்தினம் இரவு, வீரமுரசு நிகழ்வு - பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்திற்கு அருகாமையில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் சாவகச்சேரி கோட்டப் பொறுப்பாளர் தமிழ் மாறன் மற்றும் கிராமசேவையாளர் வேலாயுதபிள்ளை ஆகியோர் சிறப்புரையாற்றினர்.


**பொருளியற் கல்லூரி**
யாழ்ப்பாணம்

**A/L Day**

**கலைப் பிரிவு**

சனி, ஞாயிறு மட்டும்

ஆரம்பம் :
06.09.2003

08 - 09 Pol.Sc.- றஜீவன்
09 - 10 Dra - சுகந்தன்
10 - 11 Log - R.P.சர்மா
11 - 12 Geo - குமரன்
12 - 01 Tam - மீரா
01 - 02 H.C - ஜோதீஸ்வரன்
01 - 02 H.M. - தரன்
01 - 02 R.C. வசந்தன்

**வர்த்தகப் பிரிவு Day**

வழமையான நேரப்படி நடைபெறுகின்றன

(சி-1443)



**திறைஞ்சனாஸ்** சங்கானை

அர்ஜுன், மனீஷா நடித்த

**முதல்வன்**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்

**LONG KISS GOODNIGHT**

இரவுக் காட்சி. 8.45 (பு.நே)

(சி-1285)



**ராஜா** யாழ்ப்பாணம்.

மாதவன், சிம்ரன், சினேகா நடித்த

**பார்த்தாலே பரவசம்**

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)

ரீக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(சி-1424)


# கேள்வி அறிவித்தல்

## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

1. யாழ்ப்பாண மாவட்ட செயலாளரினால் பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| வேலை விபரம் | ஆகக் குறைந்த (ICTAD) தரம் | மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத்தொகை | மீளளிக்கமுடியாத தொகை |
|---|---|---|---|
| குருநகர் மாடிவீட்டு கட்டடங்களுக்குச் செய்யவேண்டிய அத்தியாவசிய திருத்த வேலைகள் | M 7 | Rs.40,000/= | Rs.750/= |

2. நிர்மாண பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரத்தில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
3. இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி ஆற்றலளவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
5. கேள்வி ஆவணத் தொகுதிகளை யாழ்ப்பாணம் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத் தொகையாக ரூபா 40,000/-மும் மீளளிக்க முடியாத தொகையாக ரூபா 750/- ஐயும் செலுத்தி 2003.09.17 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
6. கேள்வி ஆவணத் தொகுதிகளை (இணைப் பிரதிகளில்) யாழ்ப்பாணம் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் எல்லா அலுவலக நாட்களிலும் அலுவலக நேரங்களிலும் இலவசமாகப் பார்வையிடலாம்.
7. பொறி வைத்த கேள்விகளைக் கொண்ட தபாலுறையில் இடது பக்க மேல் மூலையில் “குருநகர் மாடி வீட்டுக் கட்டிடத்தின் அத்தியாவசிய வேலைகள்” என எழுதப்படல் வேண்டும்.
8. பொறியிடப்பட்ட கேள்விகள் “தலைவர், யாழ். மாவட்ட கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் 2003.09.18 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாக எங்களுக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். அல்லது இதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டம். இதன் பின்னர் கேள்விகள் 2003.09.18 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விகள் இடுவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் இருவருக்கு மேற்படாமல் சமுகமளிக்கமுடியும்.
9. பொறியிடப்பட்ட கேள்விப் பெட்டி திட்டப் பணிப்பாளரின் அறையில் வைக்கப்பட்டிருக்கும்.

மாவட்டக் கேள்விச் சபை,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
04.09.2003.

செ.பத்மநாதன்
தலைவர்,
மாவட்டக் கேள்விச்சபை
யாழ்ப்பாணம்.

(சி-1440)

# மிதிவெடி அபாயக் கல்வி வாரம் – யாழ்.மாவட்டம்

## செப்ரெம்பர் 01 – 07

✪ மீளக்குடியமர அல்லது தொழில் நிமித்தம் புதிய இடத்திற்குச் செல்லும்போது, அவ்விடம் ஆபத்தானதா என, அவ்வூர் வாசிகளிடம் கேட்டு அறிந்துகொள்வோம்.

✪ ஆபத்தான பிரதேசங்களைத் தவிர்த்து நடப்போம்.




**ஆபத்தான பிரதேசங்களாவன,**

⇒ கைவிடப்பட்ட

- ✦ இராணுவ மண் அரண்கள் (பண்ட்).
- ✦ காவல் நிலைகள்.
- ✦ பதுங்கு குழிகள்.
- ✦ வீடுகள்.
- ✦ வயல் நிலங்கள்.







- ✦ இராணுவ எச்சங்கள் உள்ள இடங்கள்.

⇒ மிதிவெடி அபாய எச்சரிக்கைப் பலகை போடப்பட்ட இடங்கள்.

⇒ முள்ளுக்கம்பிச் சுருள் உள்ள இடங்கள்.

**ஆபத்து நிறைந்த பூமியில் அவதானமாக நடப்போம்**

மாவட்ட மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகம் – யாழ்ப்பாணம்

(சி.1421)

# திறைசேரியின் அனுமதி பெறப்பட்டே அரசாங்க சேவைக்கு ஆட்சேர்ப்பு!

## சரித்த ரத்வத்த சுற்றறிக்கை அனுப்பிவைப்பு

(கொழும்பு)

சகல அரசாங்க திணைக்களங்களிலும், உள்ளூராட்சி சபைகளிலும் புதிதாக ஆட்சேர்ப்பு செய்வதானால், திறைசேரி செயலாளரின் அனுமதி பெறவேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அப்படி அனுமதி பெறாது ஆட்சேர்ப்புச் செய்வதால், அவர்களுக்கு ஓய்வூதிய சலுகைகள் வழங்கப்பட மாட்டாது என்று, நிதி அமைச்சின் செயலாளர் சரித்த ரத்வத்த - சகல திணைக்களங்களிற்கும் அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார்.

புதிதாக வேலையில் நியமனம் பெறுவோர் - திறைசேரிச் செயலாளிடம் தனித்தனியாக அனுமதி பெறுவதோடு, ஓய்வூதியம் பெறுவதற்கான கடிதத்தின் பிரதியை, மத்தியவங்கி ஊழியர் சேமலாப நிதிப்பிரிவுக்கு அனுப்பி வைக்குமாறு சுற்றறிக்கையில் மேலும குறிப்பிடப்பட்டுள்ளது.

ஓய்வூதியம் விரைவில் கிடைப்பதாக இருந்தால், சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் அதிகாரி - அது சம்பந்தமான ஆவணங்களை முன் ஏற்பாடாக உடன் அனுப்பிவைக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### நெடுந்தீவில் இசை நிகழ்ச்சி

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் இசைக்குழு நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில்- விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.

யாழ். மாவட்ட அரசியறதுறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, நிதர்சன பொறுப்பாளர் சேரலாதன் ஆகியோர் - சமகால அரசியல் தொடர்பாகக் கருத்துரைகளை ஆற்றினர்.

தொடர்ந்து ஈழவேந்தனின் உரையும், தமிழீழ இசைக்குழுவின் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

# பாட்சாலை மாணவர்களுக்கு காலை உணவு வழங்க முடிவு

(கொழும்பு)

பாடசாலைகளில் மாணவர்களுக்கு, காலை உணவுகளை வழங்குவதற்குக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டில் சுமார் 32 ஆயிரம் பேருககு, முதற்கட்டமாக இந்த காலை உணவினை வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

நாளை பொலநறுவை - மெதிரிகிரிய என்ற இடத்திலிலுள்ள பாடசாலையில், காலை உணவு வழங்கும் திட்டத்தினை - கல்வி அமைச்சர் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்த திட்டம் தொடர்ந்து - மட்டக்களப்பு, கிளிநொச்சி, வவுனியா, ஆகிய மாவட்டங்களில் அமுல்படுத்தப்படவுள்ளன.

நாட்டிலுள்ள பாடசாலைகளில் நாற்பது வீதமான மாணவர்கள், வறுமை மற்றும் உணவு தயாரிப்பில் ஏற்படும் காலதாமதத்தால் - காலை உணவினை உண்ணாது, பாடசாலைக்குச் செல்வதாகக் கிடைத்த புள்ளி விபரத்தையடுத்து, கல்வி அமைச்சு இந்தத் திட்டத்தினை அமுல்படுத்தியுள்ளதாக, அறிவித்துள்ளது. (01)

## மன்னார் மாவட்ட

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் கல்வி அமைச்சருக்கு மகஜர்!

(மன்னார்)

பகுதிநேரமாகக் கடமையாற்றும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 600 ஆங்கில ஆசிரியர்கள், தம்மை நிரந்தரமாக்குமாறு கோரி - நேற்று முன்தினம் மகஜர் ஒன்றினை - மன்னார் கல்வித்திணைக்களத்திற்கும், கல்வியமைச்சிற்கும் அனுப்பியுள்ளனர்.

நீண்டகாலமாகத் தாம் பகுதிநேரமாகக் கடமைபுரிவதாகவும், தற்போது பாடசாலைகள் மூன்றாம் தவணைக்காக ஆரம்பிக்கப்பட்டபோதிலும், பகுதிநேரமாகவே தொடர்ந்தும் கடமைபுரிவதாகவும், எனவே தம்மை நிரந்தரமாக்குமாறும் கேட்டுள்ளனர்.

தமது கோரிக்கைகளுக்குச் சாதகமான பதில் தராவிட்டால், சாத்வீக ரீதியில் தமது போராட்டம் தொடரும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (202)

## கைதடி சிறுவர் விவகாரம்

# கைதான சந்தேகநபர்கள் மூவரும் உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல்!

கைதடி சிறுவர் இல்லத்தில் பாலியல் குற்றம் புரிந்ததாகக் கூறப்பட்டு, கைதுசெய்யப்பட்ட மூன்று பேரும் - உயர்நீதிமன்றில்- அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட மூன்று பேரும், தாம் எதுவித குற்றமும் செய்யாத போதும், தம்மைப் பொலிஸார் கைது செய்துள்ளார்கள் என்றும், தாம் குற்றம்புரிந்தமைக்கான ஆதாரங்கள் எதுவும் அற்றநிலையில், தொடர்ந்தும் விளக்கமறியலில் வைத்திருப்பது, தமக்குக் கவலை அளித்திருப்பதாகவும் குறிப்பிட்டே, மேல் நீதிமன்றில் - அடிப்படை மீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

தம்மை உடனடியாக விடுதலை செய்யுமாறும், அவர்கள் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளனர். (01)

# கொழும்பு பங்குச்சந்தையில் முதலீட்டுத்தொகை அதிகரிப்பு

கொழும்பு பங்குச்சந்தையை - வெளிநாட்டவர்களுக்குத் திறந்துவிடப்பட்ட பின்னர்- ஒரு வருடத்துக்குள் பதிவான அதிகரித்த முதலீட்டுத் தொகை, இவ் வருடத்தின் முதல் எட்டு மாதங்களில் பதிவாகியுள்ளதாக- பங்குச்சந்தையின் பிரதிச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் - துஜார ஜயரட்ன தெரிவித்தார்.

இதற்கு முன்னர், 1994 ஆம் ஆண்டுதான், பங்குச்சந்தையில் அதிகரித்த முதலீட்டுத்தொகை பதிவாகியது. அப்போது அதன் பெறுமதி 3240 மில்லியன் ரூபாவாக இருந்தது.

பங்குச்சந்தை கொடுக்கல் - வாங்கல் மூலம் 825.04 மில்லியன் ரூபா பதிவாகியது என்றும் தெரிவித்தார்.

# இலங்கை மீனவர்களுடன் பேச்சு நடத்துமாறு ஜோர்ஜ் பெர்னாண்டஸிடம் கோரிக்கை!

## இந்திய மீனவர்கள் மகஜர் கையளிப்பு

இலங்கை மீனவருடன் பேச்சுக்களை நடாத்துமாறு கோரும் கோரிக்கை உட்பட, பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, 50 ஆயிரம் தமிழக மீனவர் கையெழுத்து இட்ட மனு ஒன்று, பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்டஸிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடித்துறைமுகங்களை கட்டவேண்டும். பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், மாலைதீவுகள் மற்றும் இலங்கையிலும் வாழும் இந்திய மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ராமேஸ்வரம் மற்றும் இலங்கை மீனவர்களுக்கிடையே பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யவேண்டும். வெளிநாட்டு மீன்பிடிக் கப்பல்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமத்தை இரத்து செய்யவேண்டும். மீனவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவேண்டும் என்பன போன்ற பல கோரிக்கைகளை வலியுறுத்தி, இம்மகஜர் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸிடம் கையளிக்கப்பட்டது.

இக்கோரிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படும் என்று பாதுகாப்பு அமைச்சர் - தமிழக மீனவர்களிடம் உறுதி அளித்திருந்தார்.

# வவுனியா வைத்தியசாலையில் குடிநீர் தட்டுப்பாடு நிவர்த்தி செய்ய சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை!

## சுகாதாரத் திணைக்களத்திடம் விடுத்தார்

(வவுனியா)

வவுனியா பொது வைத்தியசாலையில் நிலவும் பாரிய நீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் - சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தார்.

இந்த வைத்தியசாலையில்- சுமார் ஆயிரம் நோயாளர்கள் தங்கிச் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களுக்கு 24 மணிநேர நீர்விநியோகம் நடைபெற வேண்டியபோதிலும், ஒரு சில மணித்தியாலங்களே நீர்விநியோகம் இடம் பெறுகின்றது. இதனால் நோயாளர்களும், பணியாளர்களும் பல அசௌகரியங்களுக்கு உள்ளாக வேண்டியநிலை காணப்படுகின்றது.

இது சம்பந்தமாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டையடுத்தே, அவர் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

வவுனியா மாவட்ட சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் ர.கேதீஸ்வரன் இது பற்றித் தெரிவிக்கையில்-

வவுனியா பொது வைத்தியசாலையில் பல ஆண்டுகளாக ஏறத்தாழ பத்து ஆண்டுகளாக நீர்த் தட்டுப்பாடு நிலவி வருகிறது. அத்துடன், கோடை காலத்தில் அதிகளவில் நீர்ப் பற்றாக்குறை காணப்படுகிறது.

வைத்தியசாலையிலுள்ள நான்கு கிணறுகளிலிருந்து நீர் பெறப்பட்டு, இரண்டு நீர்த்தாங்கிகளூடாக விநியோகிக்கப்பட்டு வருகிறது. தினமும் வார்டுகளுக்கு நிர்விநியோகம் இடம் பெறுகின்றபோதிலும், சில மணித்தியாலங்களில் அந்த நீர் முடிவடைந்து விடுகின்றது. நீர் முடிவடைந்ததும், தாங்கிகள் மீண்டும் நிரப்பப்பட்டு, நீர் விநியோகம் நடைபெறுகிறது.

கிணறுகளிலிருந்து கிடைக்கும் நீர் போதுமானதாக இல்லை. அதனாலேயே தொடர்ந்து நீர் வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது. ஆனால், முற்றுமுழுதாக நீர்விநியோகம் தடைப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது என்று தெரிவித்தார்.

# ஜே.வி.பி - ஐ.தே.கட்சி உறுப்பினர் வாக்குவாதம்

பொலநறுவை ஐ.தே.கட்சி உறுப்பினர் சிட்னி ஜெயரத்தின, பொலநறுவை பிரதேசசபையில் வைத்து - மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த உறுப்பினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

1985 ஆம் ஆண்டு ஜே.வி.பியினர் தன்னை கொல்ல முயற்சி எடுத்ததாகவும், ஆகையால் ஜே.வி.பியினரை அரசியல் நடாத்தட்தான் அனுமதிக்கப் போவதில்லை எனவும், சிட்னி ஜெயரத்தின குறிப்பிட்டார்.

இது தொடர்பாக, மெதிரிகிரிய பொலிஸ் நிலையத்தில் - சிட்னி ஜெயரத்தினவிற்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (01)

# இலங்கைக்கு அனுப்பப்படும் வெளிநாட்டு நிதி அதிகரிப்பு!

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு பின்னர், வெளிநாடுகளில் பணிபுரிவோர் - வெளிநாடுகளிலிருந்து அனுப்பிவைக்கும் வெளிநாட்டு நிதியின் அளவு அதிகரித்துள்ளது.

வெளிநாட்டில் தொழில்புரிவோர் அனுப்பும் பணத்திற்கு, வரிச் சலுகை அளிக்கப்பட்டமையினாலேயே இந்த தொகையின் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக மத்திய வங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சென்ற ஆண்டு அனுப்பி வைக்கப்பட்ட தொகையைவிட, இவ்வருடம் 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கூடுதலாக அனுப்பி வைக்கப்படுமெனவும், மத்திய வங்கி வட்டாரங்கள் எதிர்வு கூறியுள்ளனர்.

# பொங்குதமிழ் நிகழ்விற்கு எதிராக வவுனியா நகரில் சுவரொட்டிகள்!

வவுனியா மாவட்டத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள- பொங்கு தமிழ் நிகழ்வுகளிற்குப் பல்வேறு நெருக்குதல்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், மொட்டைக் கடிதங்கள் என்பவற்றைப் பயன்படுத்தி, சில தீயசக்திகள் இந்த நெருக்குதலை கொடுத்து வருவதாகவும் தெரியவருகிறது. பொங்கு தமிழ் நிகழ்வுகளிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலான சுவரொட்டிகள் - வவுனியா நகரம், பூந்தோட்டம் சந்தி, வவுனியா வைத்தியசாலை ஆகிய் இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன.

இது தொடர்பாக வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம், வர்த்தகர் சங்கம் என்பன கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள் ளன.

வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் - பொங்குதமிழைக் குழப்பும் சக்திகளுடன் பொதுமக்கள் துணை போகாது இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

அதேவேளை, வவுனியா மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும், பொங்குதமிழ் நிகழ்வை ஆதரித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை ஆனந்துகுளம் பகுதியில் விடுதலைப் புலிகள் முகாம் அமைக்கின்றனராம்!

## சிஹல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

திருகோணமலையில் ஆனந்தகுளம் பகுதியில், விடுதலைப் புலிகளால் புதிய முகாம் ஒன்று நேற்று முன்தினம் முதல் அமைக்கப்பட்டு வருவதாகச் சிஹல உறுமய குற்றம் சுமத்தியுள்ளது.

இம்முகாம் திருகோணமலையில் இருந்து 4 Km தொலைவில் இருப்பதாகவும், எண்ணெய்க் குதத்திலிருந்து 3 Km துரத்தில் இருப்பதாகவும், கொழும்புப் பாதைக்கு 2Km தூரத்தில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளால் அமைக்கப்பட்டுவரும் இம்முகாம் - பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்றும், போர்நிறுத்த உடன்பாட்டுக்கு எதிரான செயல்கள் என்றும் சிஹல உறுமய கூறியுள்ளது.

ஆனந்தகுளம் என்ற இந்தப் பகுதி - ஆனந்தபெல என்ற சிங்கள கிராமமாக இருந்தது என்றும், 1988 ஆம் ஆண்டு பயங்கரவாதத்திற்கு எதிரானவர்களால், இப்பகுதியில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டார்கள் என்றும் தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

குரங்குப்பாஞ்சான் பிரதேசத்தில் மேலும் புதிய முகாம்களை விடுதலைப்புலிகள் அமைத்துவருவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ( )

### யாழ். படைப்பாளர்களிடமிருந்து

# ஸ்கிறிப்ற்நெற் இணையத்தளத்திற்கு நான்கு கதைகள் தேர்வாகியுள்ளன

ஸ்கிறிப்நெற் நிறுவனம் யாழ்ப் பாணப் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகுடன் இணைந்து, யாழ். மண்ணில் நடாத்திய "சமா தானச் சுருள்" (Reel peace) குறுந் திரைப்பட உருவாக்கலுக்கான, முதற் கட்டத் திரைக்கதை உருவாக்கல் பயிற்சியானது ஏப்ரல் மாதம் முடிவ டைந்திருக்கிறது.

மூன்றாவது கட்டப் பயிற்சிக்காக தேர்வு செய்யப்பட்ட 11 எழுத்தா ளர்களின் திரைக்கதைகளின் இறுதி வடிவம் - நடுவர்களுக்கு அனுப்பப் படடு, அவர்களின் மதிப்படுகள் பெறப் பட்டவையில்- மூக்குப்பேணி (ராக வன்), நேற்றைய சுவடு (சாரங்கா), பதுங்குகுழி (ஐ.சாந்தன்), முறிந்த விழுதுகள் (பாஸ்கரன்), செருப்பு (கௌதமன்), பயணம் (அமரதாஸ்), ஒரு பயணத்தின் துகள் (அல்பேர்ட் பௌலஸ்), துடிக்கும் கணங்கள் (கேச வராஜன்), தளிர் (பிரபா), புதுவீடு (பிறேமினி), ஹரி (ஐமுனாராணி) ஆகியோரின் நான்கு கதைகள்- ஸ்கிறிப்ற்நெற் இணையத்தளத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கும், ஐந்து திரைக்கதைகள் தயாரிப்பிற் கும் சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

மூக்குப்பேணி, நேற்றையசுவடு, செருப்பு, துடிக்கும் கண்கள் ஆகிய வையே ஸ்கிறிப்ற்நெற் இணையத்த ளத்தில் சேர்த்துக்கொள்ளப்படத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. மேற்படி திரைக்கதைகளின் எழுத்தாளர்கள் ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்தில், நான்கு திரைக்கதைகளும் -ஸ்கி ரிப்ற்நெற் இணையத்தள ஆலோ சனைசபையின் மீளாய்வுக்கு உட்படுத் தப்பட்டு, ஸ்கிறிப்ற்நெற் இணை யத்தளத்தில (www.Scripunet.org.uk) பிரசுரிக்கப்படவுள்ளது. பிரித்தானிய மற்றும் இலங்கையைச் சேர்ந்த திரைப்பட தயாரிப்பாளர், இயக்குநர் கள் இத்திரைக்கதைகளைத் தயா ரிக்க முன்வருவார்கள் என எதிர்பார்க் கப்படுகிறது.

ஹரி, பயணம், ஒரு பயணத்தின் துகள், துடிக்கும் கணங்கள், செருப்பு ஆகியன - அவற்றின் பெறுபேறுக ளின் அடிப்படையில் தயாரிப்புக்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

சமாதானச்சுருள் திட்டத்தின் இரண்டாவது கட்டமாகிய திரைப் படத்தயாரிப்பு ஏற்கனவே ஆரம் பிக்கப்பட்டு விட்டது. தயாரிப்புக்காகச் சிபாரிசு செய்யப்பட்டுள்ள யாழ்ப் பாண திரைக்கதைகளின் எழுத்தாளர் கள் - வரும் ஒக்டோபர் மாதத்திற்கு முன்பாக, தம் திரைப்படத்துககான இயக்குநர், தயாரிப்பாளரை முடிவு செய்யவேண்டும். மேற்கூறிய ஐந்து திரைக்கதைகளுக்குமான இயக்கு நர், தயாரிப்பாளர்களுக்கான பயிற்சி- ஒக்டோபர் மாதம் நடைபெறும். பிரித் தானிய மற்றும் சிங்களத் திரைப் படத்துறை இயக்குநர், தயாரிப்பாளர் கள் இவர்களுக்குப் பயிற்சியை வழங்குவார்கள்.

பயிற்சியின் இறுதியில், தேர்வு செய்யப்படும் இரண்டு திரைக்கதை களுக்கு மட்டுமே - ஸ்கிறிப்ற்நெற் நிறுவனம், தயாரிப்புக்கான நிதியை வழங்கும். இந்த நிதி யுனெஸ்கோ நிறுவனத்தால் வழங்கப்படுகிறது.

ஸ்கிறிப்ற்நெற்றினால், தெற்கில் இருந்து தேர்வு செய்யப்பட்ட 3 திரைக்கதைகள் (2 சிங்களம், 1 தமிழ்) உட்பட, ஐந்து திரைக்கதை கள்- நவம்பர் மாத இறுதிக்குள் பட மாக்கப்பட்டு- டிசம்பர், ஜனவரி மாதங் களில் சர்வதேச திரைப்படவிழாவி லும், இலங்கையில் 40 இடங்களி லும் திரையிடப்படும்.

மேற்படி திரைப்படங்கள் -கனடா வில் நடைபெறும். டொரன்டோ திரைப் பட விழாவிலும் திரையிடப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

திரைக்கதை உருவாக்கல் பயிற்சி யில் இறுதித் தேர்வுக்காகச் சமர்ப் பிக்கப்பட்ட அனைத்து திரைக்கதை களுமே தரமானவை. எமது மண்ணின் கதைகள் - அழகியலுடன், யதார்த மாகக் கூறுபவை. ஸ்கிறிப்ற்நெற் நிறுவனம் இரண்டு திரைக்கதைக ளுக்கே தனது நிதியுதவியை வழங்கவுள்ளது. ஏனைய திரைக் கதைகளையும் தயாரிக்க முன்வர வேண்டும் என அறைகூவல் விடுக் கப்பட்டுள்ளது என்பது குறிப்பி டத்தக்கது.

## புறநிலைப் படிப்பு அலகின் திரைப்படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கிவரும் திரைப்படக்காட்சித் தொடரில் - பாலு மகேந்திராவின் ஒளிப்பதிவில், கே. எஸ்.சேதுமாதவனின் நெறியாள்கை யில் உருவாக்கப்பட்ட 'சட்டைக்காரி' என்னும் மலையாள மொழித் திரைப் படம், தமிழ் உபதலைப்புக்களுடன் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் காண்பிக்கப் படவுள்ளது. ஆர்வலர்கள் எவரும் கலந்துகொண்டு, பயன்பெறலாம் எனப் புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்தார்.

## உள்ளூராட்சி மன்றப் போட்டியில் துணுக்காய் பிரதேசசபை முதலிடம்

வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூ ராட்சி மன்றங்களுக்கான 2003 ஆம் ஆண்டிற்கான போட்டியில் - துணுக் காய் பிரதேசசபை முதலிடம் பெற் றுள்ளது.

சென்ற மாதம் நடைபெற்ற வட-கிழக்கு மாகாண உள்ளூராட்சிப் போட்டியில் முதலிடத்தைப் பெற்ற பிரதேசசபைக்கு - திருகோணமலை உள்ளூராட்சி ஆணையாளரினால் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (17)

## மனித உரிமை ஆணைக்குழுவிடம் நீதிவான் முகாம் மக்கள் முறையீடு

மல்லாகம் நீதிவான் முகாமில் வசிக்கும் மக்களை - அந்த முகாம் அமைந்துள்ள காணி உரிமையாளர் எழும்புமாறு வற்புறுத்தியதை அடுத்து, அந்த முகாம் தலைவரினால், மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறை யிடப்பட்டுள்ளது.

இந்த முகாமில் 68 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்களை முகாமைவிட்டு வெளியேறுமாறு கோரியதையடுத்து, ஏனைய முகாம் களுக்குக் கிடைக்கும் உதவிகளும் கிடைக்கவில்லை எனக் கூறப்படு கிறது. இவர்கள், தமது சொந்த இடங்களிற்குச் செல்லமுடியாமை யினால், வேறு இடத்தில் வசிப்பதற் குரிய ஒழுங்குகளைச் சம்பந்தப்பட்ட தரப்பினர் ஏற்படுத்திக்கொடுக்க வேண் டும் என அதில் குறிப்பிடப்பட்டுள் ளது.

## அரியாலை விவசாயிகளை பயிர்செய்யக் கோரிக்கை

அண்மையில் விடுவிக்கப்பட்ட அரியாலை பகுதி விவசாய நிலங்க ளில், விவசாயம் செய்ய விரும்பும் அப்பகுதி வயல் உரிமையாளர்க ளுக்கு, கமநல சேவைகள் திணைக் களத்தினூடாக இலவச விவசாய உபகரணங்கள், விவசாய உள்ளீடு கள் என்பவற்றை விரைவில் வழங்க விருப்பதால், விவசாயிகள் தங்கள் பெயர் விபரங்களை, அரியாலை விவசாய சம்மேளனத்தில் உடனடி யாகப் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். (55)

## மானிப்பாய் இந்துக்கல்லூரியில் தேசிய கணினிக் கற்கை நிலையம்

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் தேசிய கணினிக் கற்கைநிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

மனிதவள அபிவிருத்தி கல்வி அமைச்சின் கல்வி செயற்திட்ட பிரி வினரால், மேற்படி நிலையம் முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் நிறுவப் படவுள்ளது.

இந்த நிகழ்விற்கான அறி வுறுத்தல்கள் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்குக் கிடைத்துள்ளது. இதற்கென விசேடபயிற்சி பெற்ற ஆசிரியர்கள் - தேசிய கல்வி நிறு வகத்திலிருந்து வருகை தரவுள்ள னர்.

## சீரான போக்குவரத்தினை வழங்குமாறு பொற்பதிக் கிராம மக்கள் கோரிக்கை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு - பொற்பதிக் கிராமத்திற்குப் போக்குவரத்து சேவையைச் சீராக நடத்துவதற்கு ஏற்பாடு செய்யுமாறு, அந்தப் பகுதி மக்கள் - மனித உரிமை ஆணைக் குழுவினரிடம் கோரிக்கை விடுத் துள்ளனர்.

யாழ். நகரிலிருந்து 30 மைல் தொலைவிலுள்ள இந்தக் கிராமத்திற் குச் சீரான பஸ் போக்குவரத்துச் சேவையை நடத்த எவரும் முன்வர வில்லை. இதனால், இந்த பகுதி மக்கள் - எட்டுமைல் தூரத்தைச் சைக்கிளில் சென்று, பருத்தித்துறை யிலிருந்து யாழ். செல்லவேண்டி யுள்ளது. பொற்பதிக் கிராமத்தி லிருந்து யாழ்ப்பாணம் செல்லச் சீரான போக்குவரத்துச் சேவையை நடத்த நடவடிக்கை எடுக்குமாறு, மனித உரிமை ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (17)

### யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர்

# சமகால அரசியல் பற்றி நெடுந்தீவில் விளக்கம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவிலுள்ள அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிக ளுக்கு, தமிழீழ விடுதலைப் புலிக ளின் யாழ். மாவட்ட அரசியற்துறை யினர் - சமகால அரசியல் நிலை தொடர்பாக விளக்கமளித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் நெடுந்தீவுக்குச் சென்ற யாழ். மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, ஈழவேந்தன் ஆகியோரே, நெடுந்தீவு அரச, அரசசார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து, சமகால அரசியல்நிலை, இடைக்கால நிர்வாக அலகு போன்றவை தொடர்பாக விளக்கமளித்துள்ளனர்.

தேசிய எழுச்சிப்பேரவையின் உறுப்பினர்கள், அரசசார்பற்ற நிறுவ னத்தினர், ப.நோ.கூ.சங்க ஊழியர் கள் ஆகியோரையும் - நேற்றுமுன் தினம் மாலையளவில் சந்தித்துள் ளனர்.

அதேவேளை, யாழ் மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் கவி யன்பன், சர்வதேச மாணவர் பேரவை உறுப்பினர் கண்ணன், தமிழீழ மாண வர் அமைப்பின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் மணிவண்ணன் ஆகி யோர் நேற்றையதினம் -

நெடுந்தீவு அரச திணைக்கள உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள் ஆகியோரைச் சந்தித்துள்ளதுடன், நெடுந்தீவுப் பாடசாலைக்குச் சென்று, அங்குள்ள மாணவர்களுக்குச் சமகால அரசியல் தொடர்பாகவும் விளக்கமறித்துள் ளனர். (112)

## நிவாரணம் இன்றி மக்கள் சிரமம்

(வவுனியா)

வவுனியா வடக்கு பெரிய மடுக் கிராமத்தில், மீளக்குடியமர்ந்த 40 குடும்பங்கள் எதுவித அடிப்படை வசதியும் இன்றிச் சிரமப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆறு வருடங்களின் பின், மீளக்குடியேறிய இந்தக் குடும்பங்க ளுக்கு - அரச, அரசசார்பற்ற நிறுவ னங்கள் எந்தவித உதவியும் வழங் கவில்லை என மீளக்குடியமர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

## பாலர் பாடசாலைகளில் சத்துணவுத் திட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட 22 பாலர் பாடசாலைக ளில் கல்வி பயிலும் 570 பாலர் பாடசாலை மாணவர்களுக்கு சத் துணவு வழங்குவதற்கான நடவடிக் கையினை சாவகச்சேரி நகர சபை செயலாளர் மு.செ.சரவணபவ நட வடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். இத்திட்டம் விரைவில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. (29)

## உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு தமிழ்மொழி எழுத்தாக்கத்திறன் போட்டி

### போட்டிகளில் வெற்றிபெறுவோருக்கு பரிசில்கள்

உலக ஆசிரியர் தினத்தை யொட்டி, தமிழ்மொழிமூல ஆசிரியர் களின் தமிழ்மொழி எழுத்தாக்கத் திறனை மேம்படுத்தும் நோக்குடன், தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேர வையும், தமிழ் வளர்ச்சிக் கழகமும் இணைந்து, வட-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் உதவி யுடன், வட - கிழக்கு, மலையக மாகாணங்களின் ஆசிரியர்களிடையே, தமிழ்மொழி எழுத்தாக்கத்திறன் போட்டித்தேர்வை இந்த ஆண்டும் நடத்தவுள்ளனர்.

தேர்விலே ஆகக்கூடுதலான புள் ளிகளைப் பெறும் மூவருக்கு - எதிர் வரும் உலக ஆசிரியர் தினத்தில், ஐயாயிரம் பணப்பரிசும், பேரவையின் வெற்றிப் பதக்கங்கள், சான்றிதழ்கள் என்பனவும் வழங்கப்படுவதோடு, ஒவ்வொரு கல்வி வலயத்திலும் ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெறும் மூவருக்கு, 1000 ரூபா பணப் பரிசும், சான்றிதழ்களும் வழங்கப்பட விருக்கின்றன.

கடந்த ஆண்டு வட-கிழக்கு மாகாணத்தில் 21 கல்வி வலயங்க ளிலும் போட்டி நடத்தப்பட்டு, பரிசில் கள் வழங்கப்பட்டன. இந்த ஆண்டு மலையக மாகாணங்களிலும் இந்த போட்டி நடத்தப்படவுள்ளது.

செப்ரெம்பர் 24 ஆம் திகதி இந்த போட்டி நடத்தப்பட்டு, கூடுதலான புள்ளிகளைப் பெறும் ஆசிரியர்க ளுக்கு எதிர்வரும் உலக ஆசிரியர் தினத்தில் பரிசில்களும், சான்றி தழ்களும் வழங்கப்படவுள்ளன. (17)

வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்

பெயர் : ம.தாரணி

முகவரி : வியாபாரிமூலை, பருத்தித்துறை.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------


முகவரி :------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்

# தாயக வலைப்பந்தாட்ட அணி




## சர்வதேச தரத்துக்கு உயர வேண்டும்

**அண்மையில் தமிழர் தாயகத்திலிருந்து, லண்டன் மாநகரிற்குச் சென்ற வலைப்பந்தாட்ட அணி - அங்கு தொடர் வெற்றிகளைக் குவித்துச் சாதனைகளை நிலை நாட்டியதை, எவரும் இலகுவில் மறந்துவிட முடியாது. தாயக அணியினர் வன்னி மண் மண்டபோது, அவர்களுக்குத் தமிழீழ விளையாட்டுத் துறையினரின் ஏற்பாட்டிலே - செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. எமது தாயக அணிக்குத் தலைமைதாங்கிச் சென்றவர்தான் நிசாந்தி இராஜரட்ணம். வயதிலே இளையவராக இருந்தாலும், அணியைத் திறம்பட வழிநடத்தியவர். அவரது சகோதரி நித்தியா இராஜரட்ணம்கூட அந்த அணியிலே இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. வெற்றிமேல் வெற்றி குவித்த பூரிப்பில் - உளம் திறந்து எமக்காக நிசாந்தி அளித்த கருத்துக்களில் இருந்து.........**



லண்டன் சென்ற தாயக வலைப்பந்தாட்ட அணி

**வலைப்பந்தாட்டத்துறைக்குத் தாங்கள் எவ்வாறு ஈர்க்கப்பட்டீர்கள் என்பது பற்றியும், தங்களைப் பற்றியும் கூறமுடியுமா?**

யாழ்ப்பாணம் - திருநெல்வேலியில் பிறந்த நான் - யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் கல்வி கற்று, க.பொ.த.(உ/த) வர்த்தகப் பிரிவில் 2002 இல் பரீட்சை எழுதினேன். பாடசாலை மட்டத்தில் வலைப்பந்தாட்ட அணியில் இடம்பெற்று, திறமையாக விளையாடினேன். 1999, 2000, 2001 ஆம் ஆண்டுகளில் 17, 19 வயதிற்குட்பட்ட அணியில் - அணித் தலைவியாகவும் இருந்தேன். மத்தியநிலை ஆட்டக்காரராகவும், கோல் தடுப்பாளராகவும் விளையாடினேன். 200 m, 400 m, உயரம் பாய்தல் போன்ற பல மெய்வல்லுநர் நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி, வெற்றிகளைப் பெற்றுக்கொண்டேன்.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்திலும் அங்கத்தவராகவும் உள்ளேன். 2001 ஆம் ஆண்டு யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட அணியின் ஒரு வீராங்கனையாக இருந்து சிறப்பாக விளையாடினேன். அதன் மூலமாக மாகாண அணிக்குத் தெரிவு செய்யப்பட்டேன். 2002 ஆம் ஆண்டு - யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட அணியில் ஒரு வீராங்கனையாக விளையாடி, மாகாண அணியிலும் சிறப்பாக விளையாடினேன். 21 வயதிற்குட்பட்ட தேசிய வலைப்பந்தாட்ட அணித் தெரிவிற்காக - 2002 ஆம் அண்டு தெரிவு செய்யப்பட்டு, இறுதிச் சுற்றுவரை சிறப்பாக விளையாடி, அணித் தெரிவில் இடம்பெற்றேன்.

பல கழகங்களுக்கிடையே நடைபெற்ற போட்டிகளின்போது, அதிகளவான போட்டிகளில் சிறந்த வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டேன். பாடசாலையிலும், விளையாட்டுத்துறைத் தலைவியாக விளங்கினேன். 2003 ஆம் ஆண்டு நல்லூர்ப் பிரதேச அணியில் விளையாடி, சிறப்பாட்டக்காரராகத் தெரிவுசெய்யப்பட்டேன். பாடசாலை மட்ட வலைப்பந்தாட்டத்திற்குப் பங்குபற்றி, வலயம்முதல் மாவட்டம்வரை அணி முன்னேறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கினேன்.



அணித் தலைவர் நிசாந்தியுடன் (இடது) அவரது சகோதரி நித்தியா

**எமது தாயக அணி-லண்டன் மண்ணிலே தொடர் வெற்றிகளை ஈட்டியுள்ளது. அணித் தலைவி என்ற ரீதியில் அந்த வெற்றிக்கு வழி வகுத்த காரணிகளைக் கூறமுடியுமா?**

எமது அணியில் இருந்த வீராங்கனைகள் அனைவரும் ஒன்றாக இணைந்து, மகரகமவில் மூன்று மாதங்கள் தொடர் பயிற்சிகளை மேற்கொண்டோம். எமது பயிற்றுவிப்பாளராகவிருந்த ரதிகலா ஆனந்தவடிவேலின் பயிற்றுவிப்பின் மூலமே இந்த வெற்றியைப் பெறக்கூடியதாக இருந்தது. அவர் ஏற்கனவே லண்டன் சென்று, அங்கு வேம்படி மகளிர் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின அணிகளுக்கு பயிற்சி கொடுத்தவர். அதே அடிப்படையிலேயே எமக்கும் பயிற்சியை வழங்கினார். அதுவும் ஒருவகையிலே வெற்றிக்குக் காரணமாக அமைந்தது.

அதற்கு முன்பு, யாழ்ப்பாணத்திலே விளையாட்டுத்துறை அதிகாரி ரூபசிங்கம் - எமக்குப் பயிற்சிகளை அளித்தார். அவரது பயிற்றுவிப்பின் மூலம்தான் நாம் தாயக அணியில் இடம் பிடிக்கமுடிந்தது. அதை நாம் ஒருபோதும் மறக்கமாட்டோம்.

அதேவேளை, நீண்ட இடர்பாடுகளை எதிர்கொண்டே நாம் லண்டன் சென்றோம். அப்போது, எமது மனவுணர்வு - நாம் அனைத்துப் போட்டிகளிலும் வெற்றிபெறவேண்டும் என்பதாகவே இருந்தது. இந்தஎண்ணம் அனைவர் மனதிலும் இருந்தமையினால், அணி ஒற்றுமை வெகுவாக இருந்தது. இதுவும் வெற்றிக்கு ஒரு முக்கிய காரணமாகும்.

**எமது இனம் சாராத இன்னோர் இனத்தினரோடு போட்டிகளில் பங்குபற்றும்போது, தங்கள் மனவுணர்வு எவ்வாறு இருந்தது?**

நாம் லண்டன் மாநகரில் முதலிலே எமது உறவுகளைக்கொண்ட அணிகளைத்தான் சந்தித்தோம். அவர்களது திறமை, அணியின் பலம், சற்றுக் குறைவாகவே காணப்பட்டது. இதனால், அப்போட்டிகளில் இலகுவாக வென்றோம். வெள்ளையின சகோதரர்களைக் கொண்ட அணியோடு மோதும்போது, ஆரம்பத்தில் சற்றுப் பயமாகவே இருந்தது. ஏனெனில், அவர்களது பலத்தை எம்மால் எடைபோட முடியாதிருந்தது. ஆடுகளத்தினுள் இறங்கி, சற்று நேரம் கழிந்ததும், எமது பயவுணர்வு நீங்கி, எல்லோரும் ஒற்றுமையாக அணியின் வெற்றிக்காக உழைத்து, தொடர் வெற்றிகளை எமதாக்கிக்கொண்டோம்.

**லண்டன் மாநகரில் போட்டியில் பங்குபற்றியமைக்கும், எமது நாட்டில் போட்டிகளில் பங்குபற்றியமைக்கும் இடையிலான வேறுபாடுபற்றிக் கூறுவீர்களா?**

ஆம். அங்கும், இங்குமுள்ள மிகப்பெரிய வேறுபாடு- காலநிலைதான். இதனால், லண்டன் வீராங்கனைகள் ஆகக்குறைந்தது 20 நிமிடங்களுக்குமேல் தொடர்ந்து விளையாடமாட்டார்கள். களைத்துப்போய்விடும் வாய்ப்புக்கள் உள்ளது. ஆனால், நாம் ஓரிரண்டு மணித்தியாளங்கள் வரையிலே சிறப்பாக விளையாடுவோம். லண்டன் வீராங்கனைகள் ஆரம்பத்திலே மிகுந்த எதிர்ப்பைக்காட்டி விளையாடினார்கள். நேரம் செல்லச்செல்ல, அவர்க்ள் களைத்துவிட்ட தன்மை காணப்பட்டது. இது அவர்களின் பயிற்சியின் தன்மையே என நாம் உணர்கின்றோம். அங்கே உள்ள பயிற்சி ஆடுகளங்கள் அநேகமானவை தார் போடப்பட்டவை. அவற்றிலே மிகவிரைவாக விளையாடமுடியும். சில ஆடுதளங்கள் - புற்தரையால் ஆனவை. அவற்றிலே குறைவான வேகத்திலேயே விளையாடமுடியும். அத்தோடு, அங்கு வெயில் காலம் ஆகையால், விளையாடுவது மிகவும் சிரமாக இருக்கும். மாலை, இரவு வேளைகளில் விளையாடும்போது, களைப்புத் தெரியாது விளையாடக்கூடியதாக இருந்தது.

**ஒரு சிறந்த விளையாட்டு வீராங்கனை என்றரீதியிலே, இந்தநாட்டில் உள்ளவர்கள் விளையாட்டுத்துறைக்கு என்ன பங்களிப்புச் செய்யவேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள்?**

தற்பொழுது வன்னி மண்ணிலே விளையாட்டுத்துறை தொடர்பான கல்லூரி ஒன்றை அமைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அவை நிறைவுபெற்று, வடக்கு - கிழககில அதாவது, தமிழர் தாயகப்பிரதேசத்திலுள்ள வீரர், வீராங்கனைகள் அனைவரும் இனங்காணப்படவேண்டும். அவர்களுக்குத் திறமையானமுறையிலே பயிற்சிகளை அளித்து, அதற்குரிய வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். அதன் மூலமாக நாம் நிச்சயமாகச் சர்வதேசரீதியிலே வெற்றிபெறமுடியும் என்பது எனது எதிர்பார்ப்பு ஆகும்.

அத்தோடு, எமது சமூகத்திலே பெண்கள் விளையாட்டுத்துறையிலே ஈடுபடும்போது, கலாசாரரீதியிலே சில தடைகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததுதான். ஆனாலும், விளையாட்டுத்துறை அபிவிருத்தி கருதி, இந்தநிலை மாறவேண்டும். குறிப்பாக, பெண்கள் விளையாட்டு உடைகளை அணிவதைச் சமூகம் தவறான கண்ணோட்டத்திலே பார்ப்பதை நிறுத்த வேண்டும். எமது கலாசாரம் என்பது முக்கியமானதுதான், அதை மறுப்பதற்கில்லை. ஆனாலும், விளையாட்டு எனும்போது- அந்த உடைகளை அணிவது முக்கியமானது. ஏனெனில், உடை அமைப்புக்கள்கூட வெற்றிக்குக் காரணம் என்பதை எவரும் மறத்துவிடமுடியாது.

**பார்வையாளர் என்றரீதியிலே, எமது மண்ணிலுள்ள பார்வையாளருக்கும், லண்டன் மாநகரிலே உள்ள பார்வையாளருக்கும் இடையிலான வேறுபாடுகளைக் கூறமுடியுமா?**

எமது ஆட்டங்களைக் காண 15 ஆயிரத்துககும் மேற்பட்ட பார்வையாளர்கள் திரண்டிருந்தார்கள். அவர்களில் அநேமானவர்கள் ஈழத் தமிழர்களாக இருந்தார்கள். உதாரணமாக வேம்படி மகளிர்கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் அணிகளோடு விளையாடியபோதுகூட, அனைவரும் ஈழம் என்றபேரிலே எம்மை ஆதரித்து, உற்சாகப்படுத்தினார்கள். இது எமக்கு மிகுந்த மன உற்சாகத்தை அளித்தது. எதுவித பிரிவும் காட்டாது, அனைவருமே ஒருமித்து எம்மை ஆதரித்தபோது, உண்மையிலேயே மனமகிழ்வடைந்தோம். முதலாவது ஆட்டத்திலேயே அவர்களது ஆதரவினால் எழுந்த ஓசையைக் கேட்டபோது, எமது அணியினர் குழப்பம் அடைந்தார்கள். எமது ஒவ்வொரு அசைவுகளையும்கூட அவர்கள் கரகோசம் செய்து, பாராட்டியபடியே இருந்தார்கள். பலர் போட்டி முடிந்ததும், எம்மைச் சந்தித்துக் கைலாகு கொடுத்தும், அன்பளிப்புக்களைத் தந்தும் பாராட்டினார்கள்.

**தாயகத்திலே அளிக்கப்பட்ட பெருவரவேற்புக் குறித்து உங்கள் கருத்து யாது?**

உண்மையிலேயே நாம் இவ்வாறானதொரு வரவேற்பு எமக்காகக் காத்திருக்கிறது என்பதை எதிர்பார்க்கவே இல்லை. எமது வாழ்விலேயே முதன்முறையாக இப்பொழுதுதான் இத்தகைய ஒரு வரவேற்பைப் பெற்றிருக்கின்றோம். எமக்குப் பாண்ட் வாத்திய வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்கே திரண்டிருந்த எமது மக்கள் அனைவருமே, எம்மை பாராட்டிய போது, கண்களிலே ஆனந்தகண்ணீர் வந்துவிட்டது. இது மிக்வும் எமக்குச் சந்தோசமாகவும், புதியதொரு உத்வேகத்தையும் தந்திருக்கிறது என்று சொன்னால் மிகையில்லை.

**விளையாட்டுதுறையைப் பொறுத்த வரையில் தங்கள் இலக்கு எது?**

சர்வதேசரீதியிலான போட்டிகளில் பங்கேற்று, சாதனை படைக்கவேண்டும். மிக விரைவிலே எமது தாயக அணிக்கும், இலங்கை தேசிய அணிக்கும் இடையிலே ஒரு போட்டி நடைபெற ஏற்பாடு நடைபெற்ற வண்ணம் உள்ளன. அந்த போட்டியிலும் வெல்லவேண்டும் என்பதே எமது குறிக்கோளாகும். அத்தோடு, நாங்கள் பெற்றுக்கொண்ட பயிற்சியை, எமது எதிர்கால சமூகத்திற்கும் அளித்து, விளையாட்டுத்துறை அபிவிருத்திக்குப் பங்காற்றவேண்டும் என்பதே எனது விருப்பு ஆகும்.

இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, மலேசியாவில் ஒரு போட்டியிலே கலந்துகொள்ள, சென்றவருடம் வாய்ப்புகிட்டிய போதும், இறுதியிலே அந்த வாய்ப்புத் தரப்படவில்லை. எனக்கு அது மிகுந்த மன வேதனையை அளித்தது. தற்போது நாம் லண்டனில் படைத்த சாதனைமூலம், அந்த வேதனையை மறந்துபோய்விட்டேன். இனித் தொடர்ந்தும் எமது தாயக அணிக்காகவே விளையாட ஆசைப்படுகின்றேன். இதன் மூலமாகச் சாதனைகளைப் படைப்பதே எனது இலக்காகும்.

**பொதுவாக கல்வி சாராததுறைகளில் ஈடுபடும்போது, கல்வி பாதிக்கப்படும் எனும் ஒரு பொதுவான கருத்து உள்ளது. அது பற்றி தாங்கள் கூறுவது யாது?**

என்னைப் பொறுத்தவரையிலே அவ்வாறு இல்லை என்றுதான் கூறவேண்டும். எனக்கு விளையாட்டில் ஈடுபட்டுவிட்டு வரும் போதுதான், படிப்பதற்கே இலகுவாக இருக்கும். அத்தனை விடயங்களும் மனத்திலே பதியும். பரீட்சை காலங்களின் போதும் கூட, முதல் நாள் பிற்பகலில் விளையாடிவிட்டு, அடுத்த நாள் பரீட்சை எழுதினேன். A, 2B பெறுபேறும் பெற்றேன்.

லண்டன் வந்த அணியில் இடம் பெற்ற வீராங்கனை - மாலினி மகாலிங்கம் தற்போது வெளியாகிய உயர்தரப் பரீட்சை முடிவுகளில் 3A பெறுபேறு பெற்றுள்ளார். மாவட்ட மட்டத்தில் 6 ஆவது இடத்தையும் பெற்றுள்ளார். எனவே, கல்விக்கு விளையாட்டு ஒரு தடையே இல்லை. எல்லாம் அவர்களது மனநிலையில்தான் தங்கியுள்ளது. விளையாடும்போது - விளையாட்டு எண்ணத்திலும், படிக்கும்போது - படிப்பிலும் கவனம் செலுத்தும்போது, சகல துறைகளிலும் சாதனை படைக்கமுடியும் என்பதே எனது கருத்தாகும்.

**விளையாட்டுதுறை சாராத வகையிலே உங்கள் பயணம் மூலமாகப் பெற்ற அனுபவம் எவ்வாறு இருக்கிறது?**

உலகின் எந்த மூலைக்குச் சென்றாலும், எமது நாட்டைப்போல இன்னொரு நாடு இருக்கவே முடியாது. எமது கலாசாரம் எவ்வளவோ உயர்வாக இருக்கிறது. கட்டுக்கோப்பான சமூக அமைப்புக்கள் இருக்கின்றன. வெளிநாட்டைப் பொறுத்தவரையிலே, எல்லாமே இயந்திரமயம். வாழ்க்கையும் கூட இயந்திரமயமானதாகவே இருக்கிறது. கணவன் வேலைக்குப்போக, மனைவி வேலையால் திரும்புகிறார். இருவரும் ஒருவரை ஒருவர் சந்திப்பதே அரிதாகவுள்ளது. பிள்ளைகள் உண்மையான பாசத்தைப் பெற முடியாமல் தவிக்கிறார்கள். இது நாம் நேரிலே கண்ட உண்மை நிலைப்பாடு ஆகும்.

**நேர்காணல்: இ.சர்வேஸ் - பூ.நகுலன்**

# தொழிலில் பிரச்சினை வராதிருக்க நேர அட்டவணைப்படி வேலை செய்யுங்கள்



தொழில்புரியும் பெண்களில் இருவகையினர் உள்ளனர். ஒன்று- மணமாகாதவர்கள். இரண்டு- மணமானவர்கள். இதில் மணமானவர்களுக்குப் பிரச்சினை இருப்பதுண்டு. வீட்டில் குழந்தைகள், கணவனைப் பார்ப்பது மட்டுமன்றி, தொழிலுக்கு வந்து, தொழிலையும் கவனிக்கவேண்டியிருக்கின்றது.

இருப்பினும், இத்தகைய சிக்கலுக்கு நேர்த்தியானமுறையில் முகங்கொடுப்பதற்கு ஒரேவழி- நேர அட்டவணைப்படி நடப்பதுதான். தப்பித்தவறி ஏதேனும் ஒரு வேலையில் தாமதத்தை ஏற்படுத்திவிட்டால், அது ஏனைய வேலைகளையும் பாதித்துவிடலாம். எனவே, எந்தவொரு வேலையையும் பின் போடுவது என்பது தொழில்புரியும் பெண்களுக்குச் சிரமங்களை ஏற்படுத்தும். அத்துடன், அந்தப் பின்போடலே நம்மையும் பின்நிலைக்குத் தள்ளிவிடும்.

வீட்டில் எத்தனை பிரச்சினைகள் வந்தாலும், அதேசிந்தனையோடு வேலைக்குக் போகக்கூடாது. அதேபோல், வேலைபுரியும் இடத்திலுள்ள பிரச்சினைகளின் சிந்தனைகளோடு வீட்டுக்குச் செல்லவும்கூடாது. இவை இரண்டும் குழப்பத்தை ஏற்படுத்துவதாகவே அமைந்துவிடும். ஏனென்றால், பிரச்சினைகள் என்பது கோபத்துக்கு வழிசமைப்பதாக அமைவதுண்டு.

பிரச்சினைகளின் அழுத்தத்தினால், இன்னொருவர் மீது, எங்களை எரிந்து விழச்செய்யும் அல்லது நிறைவேறவேண்டிய காரியங்களைத் திருப்திகரமாக நிறைவேற்றமுடியாத வகையில் மன அழுத்தத்தை ஏற்படுத்திவிடும்.

எனவே, அத்தகைய அழுத்தங்கள் நிகழாவண்ணம் எம்மை நாம் ஒரு சுயகட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளவேண்டும்.

அலுவலகத்துக்குச் சென்றதும், நமது சிந்தனையை - அலுவலக வேலைகளில் செலுத்தவேண்டும். சிந்தனையைச் சிதறவிட்டால், அது எமது வேலையைப் பாதிப்பதோடு, மேலதிகாரிகளின் கண்டிப்புக்கும் ஆளாக நேரிடும்.

வீட்டுப் பிரச்சினைகளைக் கூறி, ஆறுதல் பெறுவதாக நினைத்து, அலுவலகத்தில் சக ஊழியரிடம் உங்களுடைய குடும்பப் பிரச்சினைகளைக் கூறுவதும், தொழில்ரீதியில் உயர்வுகளுக்குச் சில பின்னடைவுகளையோ, கௌரவக் குறைவுகளையோ ஏற்படுத்திவிட வாய்ப்புண்டு. ஏனெனில் எவ்வளவுதான் பரிதாபக் கண்ணோட்டத்தோடு, உங்கள் பிரச்சினைகளைச் சக ஊழியர்கள் கேட்டாலும், அந்தப் பிரச்சினையின் பார்வையில், உங்கள் மீது ஓர் ஏளனப் பார்வையை அவர்கள் கொள்ளத் தொடங்குவர்.

நாளடைவில் அவரே உங்களுக்குத் தொழில்ரீதியிலான போட்டியாகவும் மாறிவிடலாம். அத்துடன், உங்களின் தொழில் மீதான வளர்ச்சிக்கும், அவரால் சில முட்டுக்கட்டைகள் ஏற்படலாம். இவர் எங்களின் குடும்ப விவகாரத்தை இன்னொருவரிடம் கூறிவிடுவாரோ என்ற பயத்தில், அவரிடம் பணிந்து போகவேண்டிய நிலையையும் இது ஏற்படுத்திவிடக் கூடும்.

எனவே, மேற்கூறப்பட்ட விடயங்களில் அவதானமாகவும், சிந்தித்தும் நடந்துகொண்டால், தொழில்புரியும் இடத்தில் சீராக எங்களுடைய கடமைகளை மேற்கொள்ளமுடியும்.

# மருத்துவ

**பெண் நோயியல் தொடர்பாக, எமது வாசகர்கள் அனுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்துள்ளார்கள் பெண் நோயியல் வைத்திய நிபுணர் - Dr.G.பவானி மற்றும் Dr.A.கெனத் ஆகியோர்.**

**கருப்பைக் கட்டியினால், உதிரப்போக்கு அதிகமாகுமா? கருப்பை யை அகற்ற நேரிடுமா? அதற்கு வேறு சிகிச்சை முறைகள் உள்ளதா?**

கருப்பைக் கட்டியானது, (**Fibromyoma**) புற்றுநோய் அல்லாத ஒரு வகைத் தசைக்கட்டியாகும். இது 30 வீதமான பெண்களில் பொதுவாகக் காணப்படுகின்றது. இது பொதுவாக - பிரச்சினை எதனையும் கொடுப்பதில்லை. ஆனால், இது சிலருக்கு (பொதுவாக மாதவிடாய் நிற்கும் வயதில்) அதிக குருதிப்போக்கிற்குக் காரணமாவதுடன், சிறுநீர் கழிப்பதில் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது.எனவே, கருப்பைக் கட்டி - பிரச்சினைகளை ஏற்படுத்தும் பொழுது,, இளவயதுப் பெண், அத்துடன் தனது குடும்பத்தைப் பூரணப்படுத்தாதவராயின் அவரிற்கு சத்திரசிகிச்சையின் மூலம், கருப்பையைத் தவிர்த்து, கட்டியை மாத்திரம் வேறாக்கி எடுக்கின்றோம்.இதனை **Myoomecromy** என்கின்றோம்.

ஆனால், தனது குடும்பத்தைப் பூர்த்திசெய்த நடுத்தர வயதுப் பெண்ணாயின் - அவருக்கு அக் கட்டியை கருப்பையுடன் சேர்த்தே எடுக்கின்றோம். இது **Hysterecromy** எனப்படும்.

பொதுவாக மாதவிலக்கு நின்றவுடன் (மெனோபொஸ்) கருப்பைக் கட்டிகள் சுருங்கிச் சிறுத்துச் செல்கின்றன.

# ஆலோசனை

**எனக்கு 2 குழந்தைகள். பெண் குழுந்தைக்கு வயது 5. ஆண் குழந்தைக்கு வயது 2. இப்பொழுது கருத்தடை அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளலாம் என்றிருக்கிறேன். நான் செய்துகொள்வது நல்லதா? என் கணவர் செய்து கொள்வது நல்லதா?**

நிரந்தர கருத்தடை அறுவைச் சிகிச்சை மேற்கொள்வதற்கான வரையறைகள் இன்னதுதான் என்றில்லாவிட்டாலும் எமது பிரதேசத்தில் நாம் பின்பற்றும் வரையறையானது - ஒரு தம்பதியினருக்குக் குறைந்தது 3 பிள்ளைகள் இருக்கவேண்டும். அத்துடன் மூத்த பிள்ளையின் வயது 8 ஐயும், இரண்டாவது பிள்ளையின் வயது 5 ஐயும் பூர்த்தி செய்திருக்கவேண்டும். அத்துடன், கணவனும் மனைவியும் நிரந்தரக் கர்ப்பத் தடைக்குச் சம்மதித்து, கையொப்பமிடல் வேண்டும். இதில் பெரும்பாலான சந்தர்ப்பத்தில் தாயின் வயதையும் கருத்தில் எடுக்கின்றோம். எனவே, உங்களைப் பொறுத்தவரை, தற்போது நிரந்தர சத்திரசிகிச்சை செய்துகொள்வது புத்திசாலித்தனம் அல்ல. நீங்கள் ஏதாவது தற்காலிக முறைகளைப் பாவிப்பதே நல்லது. மேலும் பெண்களைவிட, ஆண்கள் கருத்தடை செய்துகொள்வதே இலகுவானதும், பக்கவிளைவு குறைந்ததுமாகும்.

**பெண்நோயியல் சம்பந்தமான பிரச்சினைகள், சந்தேகங்களைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைத்தால், அதற்கான மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படும்.**

சிநேகிதியே
"நமது ஈழநாடு"
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# குழந்தை நலம் — தாய்ப்பால் முதல் முதலுதவி வரை

குழந்தையின் மிக முக்கிய ஒரே உணவு தாய்ப்பால்தான்.

தாய்ப்பால் - குழந்தைகளுக்கு மட்டுமல்ல, தாய்மார்க்கும்கூட பலவிதங்களில் நன்மையானது. இதனால், தாய்மாருக்கு மார்பகப் புற்றுநோய் வரும் வாய்ப்பு பெரிதும் குறைகிறது. சிலர் பிரசவத்திற்குப் பின்னர் உடல் பருத்து விடுவார்கள். மீண்டும் பழைய உடல் அழகைப் பெற தாய்ப்பால் கொடுப்பது நல்லது. அத்தோடு, தாய்ப்பால் கொடுக்கும் பெண்ணுக்கு ஏற்படும் மனத்திருப்தி, அவளது வாழ்க்கையின் பிற விஷயங்களிலும் பெரும் உற்சாகத்தைக் கொடுக்கும்.

தாய்ப்பால் கொடுப்பதால் - தாயின் உடல் அழகு சீர்கெடும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. உண்மையில் குழந்தை தாய்ப்பாலுக்காக மார்பகங்களை அடிக்கடி உறிஞ்சுவதன் விளைவாக, தாயின் மார்பகங்கள் சுருங்குகிறது. அதனால், அவளது வயிற்றுப் பாகம் கர்ப்பமடைய முன்பிருந்து பழைய வடிவை சீக்கிரமே பெறுகிறது.

மார்பகங்களின் அளவுக்கும், பால் சுரக்கும் அளவிற்கும் சம்பந்தமில்லை. அதிக அளவில் கொழுப்புத் தன்மை இருப்பதுதான் - பெரிய மார்பகத்தின் பின்னணி. குழந்தை பிறந்த முதல், ஆறு மாதங்களுக்குத் தினமும் 750 மில்லிலீற்றர் பால் சுரக்கும். அதற்கு அடுத்த மாதங்களில் 500 இருந்து 600 மில்லிலீற்றர் பால் சுரக்கும்.

குழந்தை பிறந்தவுடனேயே பசுப்பாலைக் கொடுப்பது தவறு. அதில் புரதச்சத்து தேவைக்கதிகமாக இருக்கின்றது. அதைவிட, அதிலுள்ள சோடியத்தின் அளவும் அதிகம் என்பதால், குழந்தையின் சிறுநீரகங்கள் அதிக அளவில் செயற்பட வேண்டிவரும்.

தாய்ப்பாலிலுள்ள கொலஸ்ட்ரம் என்ற சத்து, குழந்தையின் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை உண்டாக்கக்கூடியது. குழந்தை பிறந்த இரண்டு நாட்களுக்கு வெளிப்படும் சீம்பாலைத்தான் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்.



தாய்ப்பால் அருந்தி வளர்ந்த குழந்தைகள் மற்றக் குழந்தைகளை விட, அதிக புத்திசாலிகளாக விளங்குகிறார்கள் என்றும், ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

தொடர்ந்து பல மாதங்கள் தாய்ப்பால் அருந்தும் குழந்தைகள் - பிற்காலத்தில் தேவைக்கதிகமான பருமனோடு இருப்பதில்லை.

எவ்வளவு நேரத்திற்கொருமுறை தாய்பால் கொடுக்கப்படவேண்டும் என்பதைப் பார்க்கும்போது -

பசித்து அழும்போது, கொடுக்கலாம். மற்றும்படி இரண்டு மணி நேரத்துக்கு ஒருமுறை கொடுக்கலாம். பத்திலிருந்து இருபதுநிமிடங்கள்வரை பால் கொடுக்கலாம்.

ஆனாலும் குழந்தைகள் வேகமாகப் பாலை உறிஞ்சிக் கொள்கின்றனவா அல்லது மெதுவாகவா என்பதைப் பொறுத்ததுதான் - அது அருந்தும் அளவு? எனவே, ஐந்து நிமிடங்கள் பால் கொடுத்தவுடன், குழந்தைக்குத் தூக்கம் வருகிறது என்றால், அதைத் தூங்க விடுங்கள். எழுந்த பிறகு கொடுக்கலாம்.

# முக்கிய குறிப்புகள்

- **உறக்கம் வரவில்லையானால், தூங்கச்செல்லமுன் முன் ஒரு கப் சுடுநீரில், அரைமூடி எலுமிச்சம் பழச் சாறு பிழிந்து, இரண்டு தேக்கரண்டி தேன் விட்டுக் கலக்கிக் குடித்தால் - நல்ல உறக்கம் வரும்.**
- **கீரையை அவிய வைக்கும் பொழுது - மூடி அவிய வைக்கக்கூடாது. ஏனெனில், இயற்கையாகவே அதில் உள்ள நஞ்சுப்பொருட்கள் வெளியேறாமல் கீரையிலேயே தங்கிவிடுகின்றன.**
- **வியர்வை காரணமாக முகப்பரு வருவது வழமையான விடயம். அதைப் போக்குவதற்கு - கசகசாவை நன்கு ஊறவைத்து, நன்றாக அரைத்து, முகத்தில் தடவி, நன்கு காய்ந்ததன் பின்னர் கழுவவேண்டும். இவ்வாறாகத் தொடர்ந்து ஒரு கிழமை செய்து வந்தால் முகப்பரு இருந்த இடமே தெரியாமல் போய்விடும்.**
- **தோல் நோய்கள் உடல் துர்நாற்றம் உள்ளவர்கள்- குளிக்கும் நீரில் எலுமிச்சம் பழச்சாறும், சிறிதளவு உப்பும் சேர்த்து குளித்து வந்தால், விரைவில் நோய்கள் குணமாகும். உடல் துர்நாற்றமும் மறைந்து புத்துணர்ச்சியுடன் இருக்கும்.**
- **பல் துலக்கும் பொழுது - உமிக்கரியையும் உப்பையும் சேர்த்து துலக்கினால், மஞ்சள் கறை மறைந்து, பற்கள் வெண்மையாக மாறும்.**
- **விளாம்பழச் சாறுடன், தேன் கலந்து சாப்பிட, இருமல் குணமாகும்.**
- **குபபை மேனி இலையின் சாறுடன், தேனைக் கலந்து, உடல் கட்டிகள் மீது தடவ, கட்டிகள் உடைந்து குணமாகும்.**

# சருமத்தைக் காப்போம் பொலிவினைப் பெறுவோம்



உடல் சருமத்தை சரிவர பேணுதல் மூலம்தான் உடலில் ஒரு பொலிவை காட்டலாம்.

இதற்கு உங்கள் சருமத்தைக் காப்பதில் அதிக அக்கறை செலுத்த வேண்டியது இன்றியமையாததாகும்.

உடம்பில் வியர்வை ஏற்பட்டாலும், அதனைக் காயவிடாமல், தண்ணீரால் கழுவி விடுவது நல்லது. ஏனென்றால், வியர்வையுடன் சேர்ந்துள்ள அழுக்குகள் - சருமத்தோடு படிந்துவிடக்கூடும். இதனால், சில நேரங்களில் சருமத்தில் வியாதிகள் உருவாகவோ, தேமல், பரு போன்றவை தோன்றவோ கூடும்.

சவர்க்காரங்களை பயன்படுத்தும்போது, மிருதுவான சவர்க்காரங்களையே பயன்படுத்தவேண்டும்.

இந்த நேரங்களில் இளஞ்சூடான நிரில் முகத்தையோ, உடம்பையோ கழுவுவது நல்லது.

காலையில் பூசிய சென்ற், உடம்பின் அடிப்பகுதியில் இருக்கலாம். எனவே, அதனை இரவில் கழுவிச் சுத்தம் செய்யாவிட்டால், அதிலுள்ள சில வகையான இரசாயன கலவைகள் சருமத்திற்குக் கேட்டை விளைவிக்கலாம்.

ஒருவரது முகம் ரசனைக்குரியதாய் இருப்பதுபோலவே, கால் பாதங்கள்கூட பார்வையை ஈர்க்கக்கூடியன. எனவே, கால் பாதங்களைக்கூடப் பொலிவாக வைத்திருக்க வேண்டியதும் இன்றியமையாததே. அதற்குக் கால் சருமத்தைச் சுத்தமாகப் பேணத் தெரியவேண்டும்.

வெறுங்காலோடு இருப்பதை இயன்றவரையில் தவிர்த்துவிடுங்கள். காயங்கள் இருந்தாலும், சிறு காயம்தானே என அக்கறையின்றி இருக்காதீர்கள். அதுவே விகாரமாகி, கால் அழகை கெடுத்து விடலாம்.

அதுமட்டுமன்றி, உடம்பில் உட்செல்கின்ற கிருமிக்ளில் அநேகமானவை - கால் பாதங்களினூடாகவும் செல்கின்றன. எனவே, கால் பாதங்களைகூட சுத்தமாக வைத்திருந்தால், தேவையற்ற கிருமித் தாக்கங்களிலிருந்தும் தப்பமுடியும்.

ஆகவே, சருமத்தைக் காப்பதென்பது மட்டுமன்றி, வியாதிகளிலிருந்து காப்பதாகவும் அமையும் என்பதைக் கவனத்தில் கொள்வோம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*தாம்இன் புஉறுவது உலகுஇன் புறக்கண்டு*
*காமுறுவர் கற்று அறிந்தார்.*

- திருக்குறள்.

## நமது நோக்கு

### வெற்றி பெறுமா?

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் பணியாற்றும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் தொடர்ச்சியான பகிஷ்கரிப்புப் போராட்டங்களை கடந்த மாதம் 25 ஆம் திகதி முதல் நடத்திவருகின்றனர்.

இந்த வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டம் கடந்த சில நாட்களாக திருகோணமலையிலுள்ள மாகாணக் கல்வி அமைச்சின் அலுவலகத்துக்கு முன்பாக மறியற் போராட்டமாகத் தொடர்ந்து வருகிறது.

நூற்றுக்கணக்கான பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் மாகாணக் கல்வி அமைச்சின் அலுவலகத்தை முற்றுகையிட்டு நடத்திவரும் போராட்டத்தினால் அலுவலகச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் 1414 பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். பாடசாலையில் உள்ள ஆங்கில ஆசிரியர்களின் பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு - மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வியை போதிக்க வேண்டியதன் அவசியம் கருதியே, பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் வலயக் கல்விப் பணிமனையால் நியமிக்கப்பட்டனர்.

நாளொன்றுக்கு இரண்டு மணிநேரமே இவர்களுக்கு வேலை வழங்கப்பட்டதுடன், ஆகக்கூடுதலாக எண்பது ரூபாய்தான் வேதனமாகக் கொடுக்கப்பட்டது. நிரந்தர ஆசிரியர்கள் எவ்வாறு பாடசாலை ஆரம்பித்து முடியும் வரை பாடசாலைகளில் பணிபுரிகின்றனரோ அதேபோன்றே இவர்களும் பணியாற்ற வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

நாளொன்றுக்கு எண்பது ரூபா வீதம் மட்டுமே வேதனத்தினை கொடுத்து, பகுதிநேர ஆசிரியர்கள் என்ற பதவி நிலையை வழங்கிய போதும், அவர்களிடம் எட்டு மணித்தியாலங்கள் பாடசாலையில் கடமையாற்ற வேண்டும் எனவும் கோரப்பட்டிருக்கிறது.

இந்த நிலை ஆங்கில ஆசிரியர் என்ற அடிப்படையில் அவர்களது பணி - ஒரு ஆசிரியர் என்ற பொறுப்பு வாய்ந்த - பெருமை மிக்க இத்தொழிலுக்கு, அவர்களது நற்பெயருக்கு எந்த வகையிலும் களங்கம் ஏற்படுத்தக்கூடாது.

ஒரு நிரந்தர ஆசிரியருக்கு வழங்கப்படுகின்ற வேதனத்துடன் ஒப்பிடும்போது, மிகக் குறைந்த ஊதியமே இவர்களுக்கு வழங்கப்படுகின்ற அதேவேளை - இவர்களிடம் எதிர்பார்க்கப்படுகின்ற கல்விச்சேவை மிகவும் உயர்வானதாகவே இருக்கிறது.

ஆங்கில ஆசிரியர்களுக்கு வடக்கு - கிழக்கில் மட்டுமன்றி - நாடு முழுவதுமே பற்றாக்குறை நிலவி வரு கிறது.

பாடசாலைகளில் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட அல்லது தகுதியான ஆசிரியர்களைக் கொண்டு மாணவர்களின் கல்வித்தேவையினைப் பூர்த்தி செய்யமுடியாத நிலை தொடர்கின்றபோது, ஏற்கனவே - சேவையாற்றுகின்ற ஆசிரியர்களின் சேவை தொடர முடியாதநிலை ஏற்படுவது மாணவர்களின் கல்வியினையே பாதிக்கச் செய்யும்.

இந்த வகையில், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் போராட்டத்தில் முன்வைக்கப்பட்டிருக்கும் கோரிக்கைகளைக் கல்வி அமைச்சு கரிசனையோடு அணுக வேண்டிய கடப்பாடு உண்டு.

இதுவே கல்வி வளர்ச்சியில் ஒரு தொய்வு நிலையை ஏற்படுத்தாது என்பதோடு; பகுதிநேர ஆங்கில் ஆசிரியர்களின் கடந்தகாலப் பணிக்கு வழங்கப்பட்ட அங்கீகாரமாகவும் அமையும்.

இந்த வகையில், பலமுறை போராட்டத்தில் ஈடுபட்டுவிட்ட ஆங்கில ஆசிரியர்களின் விடயத்தில் எத்தகைய அணுகுமுறை கையாளப்படப்போகிறது என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது.

வாக்குறுதிகளை நம்பி பலமுறை போராட்டத்தைக் கைவிட்டுள்ள இந்த ஆசிரியர்களின் போராட்டம், தற்போதும் சில வாக்குறுதிகளை நம்பி தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்த வாக்குறுதிகள் உரிய முறையில், அவர்களுக்கான ஆரோக்கியமான பதில்களாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

இந்த வகையில் - பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதோடு அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது மிக முக்கியமானதாகும்.

இதன்மூலம் ஆசிரியர்களின் முழுமையான சேவையைப் பெற்றுக்கொண்டு, வெறும் காட்சிப்பொருளாக இருக்கும் ஆங்கிலப் பாடநூலையும், மாணவர் மத்தியிலான ஆங்கில அறிவையும் விருத்தி செய்வதற்குரிய வாசலைத் திறந்துவிட முடியும்.

இதுவொன்றே, பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் ஊடாக மாணவர்களுக்குப் பெற்றுக்கொடுக்கக்கூடிய உரிய பயனாகும்.

# சமாதான காலத்தை முறியடித்து போருக்கு புலிகளை அழைக்காதீர்

## வவுனியா வர்த்தகர் சங்கம்

(வவுனியா)

சமாதான காலத்தை முறியடித்து- மீண்டும் போருக்கு விடுதலைப் புலிகளை அழைக்கவேண்டாம் என, சமாதானத்திற்கு எதிரான சக்திகளைக் கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறு வவுனியாவில் எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வை ஆதரித்து, வவுனியா வர்த்தக சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் விபரம் வருமாறு -

வவுனியாவில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு - இலங்கையில், கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற போர் ஓய்ந்து, சமாதானக் காற்று வீசும் நிலையில், தென்னிலங்கை அரசியல்வாதிகளால் பரப்பப்படும் பொய்யான வதந்திகளுக்கு, ஆப்புவைத்து - சிங்கள, இஸ்லாம், தமிழ் மக்களுக்குச் சமாதானத்தில் உள்ள நம்பிக்கையையும், தேவையையும் உணர்த்துகின்ற மக்கள் விழா என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இது தொடர்பாக - நாள்தோறும் அரசியல்வாதிகள் உண்மைக்குமாறான செய்திகளை வெளியிட்டு, தங்கள் சொந்த வாழ்க்கைக்காகவும், அரசியலுக்காகவும் - ஒற்றுமையாகவும், சமாதானமாகவும் வாழவிரும்புகின்ற சிங்கள, தமிழ், இஸ்லாமிய மக்களைக் குழப்புகின்றனர்.

இந்த சமாதான காலத்தை முறியடித்து, மீண்டும் போருக்கு விடுதலைப் புலிகளையும், இராணுவத்தையும், மக்களையும் அழைக்கவேண்டாம் என, சமாதானத்தை விரும்பாத வர்க்கத்தை அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழ்பேசும் மக்கள் - பேச்சுவார்த்தைக்குரிய பொறுப்பினையும், செயற்பாட்டையும் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் அளித்துள்ளனர். தங்கள் தலைமையாக தமிழீழ விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இருபது ஆண்டுகளாக தமிழ் மக்கள் பலகோடி சொத்துக்களையும், அறுபதினாயிரத்துக்கும் மேற்பட்ட மக்களின் உயிர்களையும், பதினெண்ணாயிரம் வரையிலான போராளிகளையும், ஏராளமான சமய வழிபாட்டு இடங்களையும், பல வீடுகளையும் இழந்துள்ளார்கள். இன்று தமிழர் தமது தாயகத்தில் பூரண சுதந்திரமாக, சகல உரிமையும் பெற்று, நிம்மதியாக வாழ விரும்புகிறார்கள்.

இந்த நிலைமையைச் சகல தமிழ்பேசும் மக்களும் வெளி உலகுக்கும், அரசாங்கத்துக்கும், இலங்கையில் உள்ள அரசியல்வாதிகளுக்கும், சிங்கள சகோதர்ர்களுக்கும் தெரியப்படுத்தும் மொத்த வெளிப்பாடுதான் - பொங்குதமிழ் நிகழ்வு என்பதை ஆணித்தரமாகத் தெரிவிக்கவிரும்புகிறோம்.

வவுனியாவில் மூவின மக்களும் இதுவரை காலமும் எந்தவொரு அசம்பாவிதமும் இல்லாமல், ஒற்றுமையாக வாழ்கிறார்கள். இனிமேலும் வாழ்வார்கள் என்று நம்புகிறோம். உதாரணமாக வவுனியா வர்த்தக சங்கத்துக்குப் பல வருடங்களாக ஓர் இஸ்லாமிய சகோதரரை நாம் தலைவராக ஏற்று, சங்கத்தின் நடவடிக்கைகளுக்காக ஒத்துழைக்கிறோம் என்பதை ஆணித்தரமாகத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம்.

பொங்குதமிழ் நிகழ்வை வவுனியாவில் தமிழ் மக்களினதும், இஸ்லாமிய சகோதரர்களினதும் ஒத்துழைப்போடு விமரிசையாகக கொண்டாட மக்கள் தயாராகி வருகின்றனர்.

இவ்விழாவிற்குச் சகல அரசியல் தலைவர்களுக்கும் கட்சிப் பிரதிநிதிகளுக்கும் அழைப்புக்கள் அனுப்பப்பட்டுள்ளன. இந்த நிகழ்வுக்கு - வர்த்தக சமூகம் தனது பூரண ஆதரவை எப்போதும் வழங்கும் எனத் தெரிவித்துக்கொள்கிறோம். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிறைவேற்று அதிகாரி நியமனத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கு!

(கொழும்பு)

உத்தேச வருமான அதிகார சபையில் பிரதான நிறைவேற்று அதிகாரி ஒருவரை நியமிக்கவேண்டாம் எனக்கோரி, மேல் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவில் சுங்க அதிகாரி வாதியாகவும், நிதியமைச்சர் சொக்ஸி பிரதிவாதியாகவும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

நிறைவேற்று அதிகாரி ஒருவரை நியமிப்பதால் ஏற்படும் அதிக செலவீனங்களை தடுக்கும் முகமாகவே, புதியவர் ஒருவரை நியமிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலம் மேலும் ஒருவருட காலம் நீடிக்கலாம்!

## ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

அடுத்தமாதம் 14 ஆம் திகதியுடன் ஓய்வு பெற இருக்கின்ற பொலிஸ் மா அதிபர் ரி.ஆனந்தராசாவின் சேவைக்காலத்தை, மேலும் ஒரு வருட காலத்திற்கு நீடிக்கலாம் என்று - ஜனாதிபதி செயலக வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

இது சம்பந்தமாக பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் ரஞ்சித் அபேசூரியாவிடம் விசாரித்தபோது - பொலிஸ் உத்தியோகத்தர்களின் சேவைக்காலம் நீடிப்பது பற்றி தீர்மானம்- பொலிஸ் ஆணைக்குழுவால் எடுக்கமுடியாது என்று அவர் தெரிவித்தார்.

பொலிஸ் மா அதிபர் ஆனந்தராசாவுக்கு அடுத்த மாதம் 14 ஆம் திகதியுடன் 60 வயது பூர்த்தியாகின்றது. இவரின் சேவைக்காலம் நீடிக்கவேண்டுமானால், ஜனாதிபதி அரசியலமைப்புச் சபையுடன் கலந்தாலோசித்த பின்னரே முடிவு எடுக்கமுடியுமென்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நான்கு பிரதிப் பொலிஸ் மா அதிபர்களின் சேவைமூப்பு பற்றிய தகவல்களை - பொலிஸ் ஆணைக்குழு திரட்டிவருகின்றது.

# இருபது வருடகாலப் போரினால் 30 ஆயிரம் படையினர் அங்கவீனம்!

## அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தன தெரிவிப்பு

இருபது வருடகால யுத்தத்தில் - 30 ஆயிரம் இராணுவ வீரர்கள் அங்கவீனர்களாக்கப்பட்டுள்ளனர் என்றும், 15 ஆயிரம் பேரைக் காணவில்லை என்றும் - புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வருமுன்னர் நாடு இரண்டாகப் பிளவுபட்டிருந்தது. வடக்கில் இருந்து தெற்கிற்கோ, தெற்கில் இருந்து வடக்கிற்கோ யாரும் சுதந்திரமாக பிரயாணம் செய்யமுடியவில்லை. ஒரு நாட்டிற்குள் இருதேசத்தை ஏற்படுத்திய பிரிவுச் சுவரை - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதான முயற்சியின் மூலம் தகர்த்தெரிந்துள்ளார்.

இலங்கை வரலாற்றில் துட்டகைமுனு - இலங்கைக்கு எவ்வாறு புத்துயிர் கொடுத்தாரோ, அவ்வாறே ரணில் விக்கிரமசிங்க சமாதான முன்னெடுப்புக்களின் ஊடாகவும், அபிவிருத்திப் பணிகளுடாகவும் இந்த நாட்டுக்குப் புதுத்தென்மை அளித்துள்ளார்.

எமது அரசும், எனது அமைச்சும் வடக்கிற்கே அதிகம் சேவை செய்வதாக குறைகூறுகின்றனர். வடக்கில் காணப்பட்ட யுத்த சூழ்நிலைகளை நீக்கியதாலேயே - தெற்கில் வாழும் மக்கள் மரணபயமின்றி மகிழ்ச்சியோடு வாழ்ந்து வருகின்றனர். எமது உயிர்களையும் பணயம் வைத்து யுத்தத்தை தணித்ததாலேயே, சவப்பெட்டிகள் தெற்குநோக்கி வருவதில்லை. குண்டுச்சத்தங்கள் கேட்பதில்லை.

யுத்தத்தின் மூலம் நாட்டில் அழிவு ஏற்படுவதைத் தவிர, வேறு எந்த நன்மையும் ஏற்படாது. பேச்சுவார்த்தைகள், விட்டுக்கொடுப்புக்கள் மூலமே நிரந்தர தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று ஜயலத் மேலும் தெரிவித்தார்.

## தெல்லிப்பளை கோட்ட பாடசாலைகளில் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள்!

தெல்லிப்பளை கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் - இன்று பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

இன்று அளவெட்டி அருணோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விபரம் வருமாறு.

14 வயதுப் பிரிவு - மகாஜனாக் கல்லூரி எதிர் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம், 16 வயதுப்பரிவு - இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் எதிர் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம், 18 வயதுப் பிரிவு - இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் எதிர் மல்லாகம் மகாவித்தியாலயம்.

மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களின் விபரம் வருமாறு -

14 வயதுப்பிரிவு - யூனியன் கல்லூரி எதிர் மயிலிட்டி கலைமகள் வித்தியாலயம், 16 வயதுப்பரிவு - யூனியன் கல்லூரி எதிர் குளமன்கால் ரோமன் கத்தோலிக்க பாடசாலை, 18 வயதுப்பிரிவு - யூனியன் கல்லூரி எதிர் குளமங்கால் ரோமன் கத்தோலிக்க பாடசாலை. (72)

## தமிழகத்திலிருந்து 5 அகதிகள் நெடுந்தீவை வந்தடைந்தனர்

தமிழக அகதி முகாமில் தங்கியிருந்த மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 5 பேர் நேற்றுக் காலை மூன்று மணியளவில்- நெடுந்தீவு மேற்குப் பகுதியில் இந்திய மீன்பிடிப் படகில் வந்து சேர்ந்தனர்.

இவர்கள் பொலிஸ் விசாரணைகள் முடிந்து, பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பின், உதவி அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டனர். யாழ். செயலகத்தில் இவர்கள் ஒப்படைக்கப்பட்டு, சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

வல்வெட்டித் துறையைச் சேர்ந்த ஏ.பாலகிருஸ்னன் (வயது 32), முல்லைத்தீவைச் சேர்ந்த ம.கமலராணி (வயது 32), ம.அன்ரனி றோய் (வயது 04), ம.அட்சியா (11 மாதம்), புங்குடுதீவைச் சேர்ந்த செ.சரோசா ஆகியோரே இவ்வாறு தமிழகத்திலிருந்து நெடுந்தீவுக்கு வந்தவர்களாவார்.

# இந்த வார பலன்கள்

## 05.09.2003 ~11.09.2003 (திருக்கணிதம்)

| | | ராகு | சனி |
|---|---|---|---|
| செவ் யுரோ | 05பிஇ.2-51 மே.ரா<br>05பிஇ.2-51துல-கே<br>06 இ. 9-30 மக-சந் | | |
| நெப் | 08 இ. 3-01 கும்-சந்<br>10 இ. 12-12 கன்-சுக்<br>11 ப.10.33 மீன்-சந் | | சூ.புத குரு.சுக் |
| சந் | கேது | | |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் கால்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு பொருள் வரவு நன்றாகஇருக்கும். ஆரோக்கியம் குறையும். மனோநிலை சிறப்பாக இராது. வீண்தொல்லைகள் வந்துசேரும். மறைமுக விரோதங்கள் இருக்கும். தேவையற்ற விடயங்களில் தலையிடாது தவிர்த்துக்கொள்ளுதல் நன்று. வீடு, வாகன வசதிகள் சிறக்கும். உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு இடம்மாற விருப்புகள் தோனறும். ஆயினும், நினைத்தவாறு செய்ய முடியாதநிலை இருக்கும். திருமணமாகாதோருக்குக் கருமம் கைகூட வாய்ப்புக்கள் ஏற்படும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் நல்ல விலைபோகும். பணநிலை நன்று. மாணவர்களுக்குத் தேகசுகக்குறைவு ஏற்படும்.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் கால்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் கால்கள்)*



இவர்களுக்கு உஷ்ண மிகுதியும், தேக அலைச்சலும் கொடுக்கும். வீண்வம்புகள் வந்துசேரும். தேகாரோக்கியமும், குடும்ப சுகமும் இடையிடையே பாதிக்கப்படும். குடும்பத்தில் சச்சரவுகள் தோன்றலாம். மௌனமாக இருந்தால், எதையும் சமாளிக்கலாம். வார முற்பகுதியில் பல கஷ்டங்கள் இருப்பினும், பிற்பகுதி ஓரளவு நன்று. உத்தியோகத்தர்கள் தாம் நினைத்தபடி கருமங்களை ஆற்றமுடியும். செலவுகள் அதிகமாகவே இருக்கும் மணவாழ்க்கை சிறப்படைய வாய்ப்புக்கள் குறைவு. வியாபாரிகளுக்குப் பொருள் நட்டம் ஏற்படுவது தவிர்க்கமுடியாது. மாணவர்கள் கல்வியில் ஊக்கம் குறைந்து காணப்படுவர்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3, 4 ஆம் கால்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் கால்கள் )*



மிதுன இராசிக்காரருக்கு ஏழரைச்சனி நடுப்பகுதி நடந்துகொண்டிருக்கிறது. வியாழ சுகம் இல்லை. பொருளாதார நிலை மிகவும் கஷ்டமாக இருக்கும். பிரயாசைக்கேற்ப வருமானம் கிடையாது. மனச்சஞ்சலங்கள் இருக்கும். தொடங்கும் கருமங்கள் கைகூடுவதில் இழுபறி இருக்கும். இனசன பந்தங்களால் உதவியும், சந்தோஷமும் உண்டாகும். உத்தியோகத்திலுள்ளவர்கள் சிலர் மாற்றங்களைப் பெறுவர். எனினும், நிம்மதி குறைவாகவே இருக்கும். திருமணத்தை எதிர்நோக்குவோருக்கு, பேச்சுக்கால்கள் நடைபெற்றாலும் - கருமம் கைகூடுவது கடினம். வியாபாரிகள் குறைந்த இலாபத்தையே பெறுவர். மாணவர்கள் கல்வியில் ஊக்கமாக இருப்பார்கள். சித்தி உண்டு.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் கால், பூசம், ஆயிலியம்)*



இவர்களுக்குத் தொழில்நிலையில் உயர்ச்சியும், பணவருவாயும் ஏற்படும். குடும்பநிலை நன்று. தடைப்பட்டிருந்த சில விடயங்கள் கைகூடும். நண்பர்களால் உதவிகிடைக்கும். வீட்டில் சுபகருமங்கள் நடைபெறும். தூரத்து உறவினர்கள் வருகை தருவர். உத்தியோகத்தர்கள் - பொதுமக்களால் நன்மதிப்பையும், கௌரவத்தையும் பெறுவர். வாரஇறுதி சிறப்பாக இருக்கும். விவசாயிகள், வியாபாரிகள் நிறைந்த இலாபம் பெறுவார்கள். வங்கிநிலை சீராக இருக்கும் திருமணங்கள் கைகூடும். மாணவர்கள் கல்வியிலும், விளையாட்டு முதலியவற்றிலும் ஊக்கம் காட்டுவர்.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் கால்)*



சிங்கராசியில் பிறந்தவர்களுக்குத் தேசுகம் பேணவேண்டி இருக்கும். ஆடம்பரப் பொருட்களில் செலவுகள் அதிகமாகும். அடிக்கடி பிரயாணங்கள் ஏற்படும். புத்திரர்களால் உதவியும், வருவாயும் கிட்டும். குடும்பத்தில் சில கருத்து வேற்றுமைகள் தோன்றும். உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு மறைமுக எதிர்ப்புகள் இருக்கும். எனினும், அவற்றைச் சமாளித்து முன்னேறுவீர்கள். காதலில் ஈடுபட்டவர்கள் ஏமாற்றமடைவார்கள். வியாபாரிகளுக்குத் தொழில் நன்றாகவே இருக்கும். வியாபாரம் சம்பந்தமான பிரயாணங்கள் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முயற்சிக்கேற்ப முன்னேறுவர்.

### கன்னி


*(உத்தரம் 2, 3 4 ஆம் கால்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் கால்கள்)*



இவர்களுக்குச் செய்தொழில் விருத்தியும், வருவாயும் சிறப்படையும். பெரியோரின் உறவுகள் அதிகரிக்கும். பொருளாதாரரீதியாக இருந்த சில கஷ்டங்கள் நிறைவுபெறும். சமய நிகழ்வுகளில் அதிக நாட்டம்கொள்வர். பலராலும் கௌரவிக்கப்படுவர். பிரயாணங்களில் அவதானமாக இருக்கவும். பொருள் பறிபோகும்நிலை உண்டு. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அதிகமாயினும், தமது சாமர்த்தியத்தால் சமாளித்துக் கொள்வர். மணவாழ்க்கையை எதிர்நோக்குவோருக்கு காலதாமதம் காட்டும். வியாபாரிகளுக்கு வருவாய் சிறப்படையும். மாணவர்கள் -ஆசிரியர்களின் நன்மதிப்பைப் பெறுவர்.

### துலாம்

*(சித்திரை 3 , 4 ஆம் கால்கள், சுவாதி விசாகம் 1,2, 3 ஆம் கால்கள்)*



இவ்விராசியில் ஜனனமானவர்களுக்கு இவ்வாரம் தொழில்துறையில் முன்னேற்றமும், பொருளாதாரத்தில் ஏற்பட்டிருந்த தடைகளும் நீங்கி, வளமான வாழ்வு கிட்டும். தேகசுகம், குடும்ப சுகம் சிறப்பாக அமையும். புதிய தொழில்களில் ஈடுபடும் வாய்ப்புக்களும் கிடைக்கும். நினைத்த கருமங்கள் நிறைவேறும். பிற நாட்டிலிருந்து நற்செய்திகள் வரும். இனத்தவர்களுடன் ஈடுபாடு அதிகரிக்கும். பிரயாண வாய்ப்புக்களும் உண்டு. உத்தியோகத்தர்களுக்குத் தொழில் சம்பந்தமான பிரயாணங்கள் இருக்கும். மேலதிகாரிகளின் உதவி உண்டு. திருமணத்தை எதிர்நோக்குவோர் கருமம் நிறைவுபெற்று சந்தோஷமடைவார்கள். வியாபாரிகளுக்கும் வருவாய் அதிகரிக்கும். மாணவர்கள் முன்னேற்றமடைவர்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் கால், அனுசுஷம், கேட்டை)*



விருச்சிக ராசியில் பிறந்தவர்களுக்குத் தொழிற்துறையிலிருந்து வந்த பிரச்சினைகள் தீரும். நன்மதிப்புண்டு. குடும்பத்தில் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். பிரயாணத்தால் சிலருக்கு பொருள் நட்டம் ஏற்படலாம். சிலருக்குக், காணி சம்பந்தமான பிணக்குகள் கஷ்டத்தைக் கொடுக்கும். உத்தியோகத்தர்கள் - மேலதிகாரிகளின் தொல்லைக்கு ஆளாக நேரிடும். வியாபாரத்துறையினர் குறைந்த லாபத்தையே பெறுவர். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். திருமணப் பலன்கள் குறைவாகவே காணப்படுகிறது. மாணவர்களுக்குக் கல்வியில் ஊக்கம் தேவை. ஆசிரியர்களின் நன்மதிப்பு உண்டு.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் கால்)*



இவர்களுக்குத் தொழில் முயற்சிகளில் சிறு தடங்கல்கள் காணப்பட்டாலும், வாரஇறுதியில் நன்மையைக் கொடுக்கும். குடும்பத்தில் மங்கள நிகழ்வுகள் இடம்பெறும். இனப்பற்றுக்களின் வருகையால், வீட்டில் குதூகலம் காணும். செலவினங்கள் அதிகமாக இருந்தாலும், அதற்கேற்ப வருவாய்கிட்டும். உத்தியோகத்தர்கள் தாம் நினைத்தபடி கருமமாற்ற முடியாது திண்டாடுவர். மங்கள கருமங்களை எதிர் நோக்குவோர் - கருமம் கைகூடப் பெறுவர். வியாபாரிகளுக்கு விற்பனைகள் சிறப்பாக நடைபெறும். மாணவர்கள் மத்தியில் உற்சாகமும், மகிழ்ச்சியும் நிலவும்.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் கால்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் கால்கள்)*



மகரராசியினருக்கு செய்தொழிலில் வீண் விரயங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். தொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடையாது. எதிலும் புதிதாக முத லீடு செய்தவதைத் தவிர்க்கவும். தேக சுகம் பர்திப்படைவதால், மருத்துவரை நாடவேண்டியேற்படும். தமது வருவாய்க்கேற்ப செலவு செய்தல், நன்மை பயக்கும். எதிலும் பொறுமை தேவை. உத்தியோகத்தர்கள் திடீர் மாற்றங்களைச் சந்திக்க நேரிடும். மேலதிகாரிகளுடன் ஒத்துப்போவது நன்று. மங்கள வாழ்வை எதிர்பார்ப்போருக்கு கருமம் தாமதமடையும். வியாபாரிகளுக்குத் தொழில் நன்றாக நடைபெற்றாலும், கடன் தொல்லைகள் சிக்கல்லைக் கொடுக்கும். மாணவர்கள் கல்வியைத் தொடருவதில் கஷ்டங்களை எதிர்நோக்குவர்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் கால்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் கால்கள்)*



இவர்களுக்குச் செய்தொழிலில் முன்னேற்றமும், பணவருவாயும் அதிகரிக்கும். நண்பர்களால் உதவிகள் வந்துசேரும். தொடங்கிய கருமங்கள் எதிர்பார்த்த பலனைத் தரும். தேகசுகம் பாதிப்படையாது. இனத்தவர்களால் சில தொல்லைகள் வந்துசேரும். வீண் விடயங்களில் தலையிடுவதைத் தவிர்க்கவும். வாகனம் வைத்திருப் போருக்குத் திடீர் நட்டங்கள் காட்டும். உத்தியோகத்தர்கள் தமது சாமர்த்தியத்தால் உயர்ச்சியடைவர். மேலதிகாரிகளின் பாராட்டும் கிட்டும். வியாபாரத்துறையினர் சொற்ப லாபமடைவர். விற்பனை மத்திமமாகவே இருக் கும். திருமணத்தை எதிர்நோக்குவோர் நற்பலனையடைவர். மாணவர்கள் கூடுதலாக விளையாட்டுக்களில் ஈடுபடுவர்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் கால் உத்தராட்டாதி, ரேவதி)*



மீனராசிக்காரர்களுக்குத் தொழிற்துறைகளில் இழப்புக்களும், நட்டங்களும் ஏற்படும். மனக்கவலை அதிகரித்துக் காணப்படும். தொடங்கும் கருமங்கள் தாமதமாகவே நிறைவு பெறும். தேகசுகம், குடும்ப சுகம் சிறப்பாக இராது. வைத்திய உதவிகள் தேவைப்படும். பிள்ளைகளால் மனக்கவலையடைய நேரிடும். கடன் தொல்லைகளும் நிம்மதியைக் கெடுக்கும். குல தெய்வவழிபாடு நன்மைதரும். வாகனம் செலுத்துவோர் விபத்துக்கள் பற்றி அவ தானமாக இருக்கவும். உத்தியோகத் திலுள்ளோர் - தொழில் மாற்றங்களைப் பெறுவர். புதுவாழ்வை எதிர்பார்ப்போர் ஏமாற்றமடைவர். வியாபாரிகளுக்கு முதலீடு கள் ஓரளவு விலைபோகும். தூரதேசப் பிரயாணங்கள் கைகூடும். மாணவர்கள் கல்வியில் ஊக்கமெடுத்தல் வேண்டும்.

# 'சிவலிங்க வழிபாட்டால் சிறப்புகள் தேடி வரும்'



இந்துக்கள் பல தெய்வ வழிபாட்டினை மேற்கொண்டு வருபவர்கள். சிவலிங்கத்தை வழிபட்டாலே, எல்லா மூர்த்திகளையும் வழிபட்ட பலனைப் பெறலாம். அதைப் பலரும் அறியும்படி தெரிவிக்கவே, சிவன் கோயில்களின் மூலஸ் தானத்தில், சிவலிங்கத்தைத்தவிர, வேறு பிரதிஷ்டை ஒன்றுமின்றி அமைத்துக் காட்டியிருக்கின்றனர் நமது முன்னோர்கள்.

சிவலிங்கத்தில் - பிரம்மா, விஷ்ணு, சிவபாகங்கள் ஆகியன மூன்றும் அமைந்திருப்பது- சிவலிங்கம் மூன்று கூறுகளுடையன. அடிப்பாகம் - நாற்கோணவடிவாய் பூமிக்கு அதிபதியான, கிருஷ்டி கர்த்தாவான பிரம்ம பாகத்தை உணர்த்துவதாகும். மத்திய பாகம்- எட்டுப்பட்டமுடைய அட்டகோண வடிவமாய் வாமை, சேஷ்டை, ரௌத்ரி, காளி, கல்விகரணி, பலவிகரணி, பலப்பிரதமனி, சர்வபூததமனி என்னும் மகாவிஷ்ணுவின் எட்டு சக்திகளும் அதனோடு பொருந்த இருக்கும், ஆவுடை எனப்படும் மனோன்மணியாகிய ஒன்பதாவது சக்தியும் சேர்ந்து, மகாவிஷ்ணுவின் நவசக்திகளாகிய நீருக்கு அதிபதியான காத்தல் எனப்படும் ஸ்திதி கர்த்தரான விஷ்ணு பாகத்தை உணர்த்துவதாகும்.

இதற்கு மேலுள்ள பாகம் - நெருப்பிற்கு அதிபதியும், அழித்தல் எனப்படும் சம்ஹாரம், மறைத்தல் எனப்படும் திரௌபவம், அருளல் எனப்படும் அனுக்ரஹம் ஆகிய முத்தொழில்களுக்கும் அதிபதியாகிய சிவபாகமாகும். பூமிக்கு அதிபதியான பிரம்ம பாகம்- பூமிக்குள் மறைந்து, ஒடுங்கிநிற்கும். நீருக்கு அதிபதியான விஷணு பாகம் - அபிஷேக நீரைத் தாங்கி, விரிந்துநிற்கும். நெருப்புக்கு அதிபதியான சிவபாகம் - மேலோங்கி ஜோதி போன்று ஜொலித்துக்கொண்டிருக்கும். இம்மூன்றும் சேர்ந்த அருவமும், உருவமுமற்ற, ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதி வடிவே - சிவலிங்கம் ஆகும்.

ஆகவே, சிவலிங்கத்தை வழிபட்டால், பிரம்மாவை வழிபட்ட பயனும், மகாவிஷ்ணுவின் பத்துத் திரு அவதாரங்களை வழிபட்ட பலனும், சிவபெருமானின் 25 திருமூர்த்தங்களை வழிபட்ட பலனும் ஒருங்கே கிடைக்கக்கூடியதாகவும் இருக்கிறதென்பதை - வேதாகமங்கள் வலியுறுத்துகின்றன. புராண, இதிகாசங்களும், அனுபூதிமான்களது அனுபவங்களும்-அந்த உண்மையை உறுதிப்படுத்துகின்றன. அரசமரம் சுற்றி வரும் அன்பர்கள் - சைவர்களாக இருந்தாலும், வைணவர்களாக இருந்தாலும் எல்லோரும் ஒன்றுபோல் சொல்லிவரும் "மூலதோ, பிரம்மரூபாய, மத்யதோ, விஷ்ணு ரூபிணி, அக்ரத சிவரூபாய, விருஷராஜாதநம" என்ற மந்திரமும் சிவலிங்கத் தத்துவத்தின் உண்மையை நன்றாக வலியுறுத்துகிறதல்லவா? அல்லாமலும், உலகுள்ள எல்லா வகையான ஜீவராசிகளின் தலைவர்களும், பிண்டங்களும், பூமியும், சந்திரனும், சூரியனும், நட்ஷத்திரங்களும், அண்டங்கள் பலவும், ஆகாயமும் - சிவலிங்க வடிவின்·மேல்பாகம்போல அமைந்திருப்பது சிந்திக்கத்தக்கது.

மேலும் பாவங்களில் எல்லாம் மிகவும் கொடியது - பிரம்ம ஹத்திதோஷம் எனப்படும் மனிதரைக் கொன்ற கொலைப்பாவம். அதை நீக்கவேண்டுமானால், தனியாக எந்த மூர்த்தியையும் வழிபட்டு நீக்கிக்கொள்ளமுடியாது என்பது வேதாகம விதி. அதை நீக்கவேண்டுமானால் - சிவலிங்க பூஜையே செய்தாக வேண்டும்.' அதனாலேயே, திருவிளையாடல் புராணத்தில் பஞ்சமா பாதகம் செய்தவனுக்கும் - மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் அவரது பாவங்களை மன்னித்து, நற்கதி கொடுத்ததாகக் காண்கிறோம்.

காஞ்சிபுரத்தில் அம்மையார் சதாவும் - சிவலிங்க பூஜை செய்துகொண்டிருப்பது யாவரும் அறிந்ததே. மகாபாரத்தில் பஞ்சபாண்டவர்களும் சிவபூஜா துரந்த்ரர்களாக இருக்க, அர்ஜுனன் - சிவபெருமானிடம் இருந்து பாசுபதம் பெறுவதற்கு விசேட தவம்புரிந்தது யாவரும் அறிந்ததே. கந்தபுராணத்தில் சூரனும், ஸ்ரீ சுப்பிரமணியப்பெருமானும் திருச்செந்தூரில் சிவபூஜை செய்துகொண்டிருப்பதைக் காணலாம். கஜமுகாசுரனை சம்ஹாரம் செய்தபிறகு, சிவலிங்க பூஜை செய்துகொண்டிருப்பதைக் காணலாம்.

கவிமாமணி.
காரை. எம்.பி அருளானந்தன்

# லைபீரியாவில் மோதல் தீவிரமாகிறது அகதிகள் தலைநகர் நோக்கி நகர்வு!



லைபீரியாவில் - மீண்டும் தீவிரவாதிகளுக்கும், அரச படையினருக்கும் இடையே போர் ஆரம்பித்துள்ளதால், பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகள் தலைநகர் மொன்ரோவியாவை நோக்கி நகர்வதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கானாவில் - சென்ற மாதம் லைபீரியாவின் இடைக்கால ஜனாதிபதி மோசொஸ் பிளாவிற்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே பேச்சு வார்த்தை நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

லைபீரியாவில் பணிபுரியும் மேற்கு ஆபிரிக்க அமைதிப் படையினரை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடன் நிவாரண உதவிகளைச் செய்யுமாறு ஐக்கிய நாடுகள் சபை கேட்டுள்ளது.

மேற்கு ஆபிரிக்க சமாதான படையினர் லைபீரியாவில் கடமைபுரிய ஆரம்பித்த பின்னர், போர் முடிவிற்கு வந்தபோதிலும், சிறு கைகலப்புகள் நடைபெற்று வருகின்றன.

# அரபாத்துடனான முரண்பாட்டினை மஹ்மூட் அபாஸ் ஒப்புக்கொண்டார்!

## நாடாளுமன்ற ஆதரவையும் கோரினார்

பலஸ்தீனிய பிரதம மந்திரி மஹ்மூட் அபாஸ் - நாடாளுமன்ற அங்கத்தவர்களை, அமெரிக்காவினால் தயாரிக்கப்பட்ட சமாதானத்திற்கான, பாதை வரைபை செயற்படுத்துவதற்கு முழு ஆதரவையும் வழங்குமாறு கேட்டிருந்தார்.

பிரதம மந்திரி அபாஸ், நாடாளுமன்றத்தை அமைத்து 100 நாட்கள் மாத்திரமே கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்தக் காலப் பகுதியில் தான் ஆற்றிய கடமைகளை எடுத்துரைத்த பலஸ்தீனியப் பிரதமர், அரபாத்துக்கும் தனக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்ததை ஒப்புக்கொண்டார்.

மேலும், தலைவர் அரபாத்துக்கெதிரான அமெரிக்காவின் கருத்துக்களை நீக்கிவிடுமாறும், அரபாத்- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, அரசியல் அமைப்பிற்குட்பட்ட, பலஸ்தீனிய மக்களின் ஜனாதிபதி என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும் எனவும் கேட்டிருந்தார்.

இதேநேரத்தில், பலஸ்தீனியத் தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்துவதில்



அரபாத் மிகுந்த வல்லமைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அரபாத்துடன் தொடர்புகளை வைத்துக்கொள்வதற்கு அமெரிக்கா விரும்பாத காரணத்தினால், அபாஸ் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டிருந்தார்.

# நேபாளத்தில் ஆர்ப்பாட்டம் காரணமாக நூற்றுக்கு மேற்பட்ட மாணவர் கைது!

(காட்மண்டு)

நேபாளத் தலைநகர் காட்மண்டுவில் - மன்னர் கஜனேந்திராவுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 100 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மன்னர், பதவியில் இருந்து வெளியேறவேண்டும் என்று கருதும் அமைப்புகளில், நேபாளிய காங்கிரஸின் மாணவர் கிளையும் ஒன்றாகும். இந்த மாணவர் அமைப்பிற்கும், மாவோ தீவிரவாதிகள் அமைப்பிற்கும் இடையில் தொடர்புகள் இருப்பதாகப் புலனாய்வு அறிக்கை மூலம் அறிந்துவைத்துள்ளதாக, அரசு அறிவித்துள்ளது.

உலகவலம்

# கேள்வி அறிவித்தல்

## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

1. யாழ்ப்பாண மாவட்ட செயலாளரினால் பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| வேலை விபரம் | ஆகக் குறைந்த (ICTAD) தரம் | மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத்தொகை | மீளளிக்கமுடியாத தொகை |
|---|---|---|---|
| கல்வியங்காடு பொதுச் சந்தை புனரமைத்தல் | M6 | Rs.70,000/= | Rs.750/= |

2. நிர்மாண பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரத்தில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
3. இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணகிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி ஆற்றலளவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
5. கேள்வி ஆவணத் தொகுதிகளை யாழ்ப்பாணம் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத் தொகையாக ரூபா 70,000/-மும் மீளளிக்க முடியாத தொகையாக ரூபா 750/- ஐயும் செலுத்தி 2003.09.18 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
6. கேள்வி ஆவணத் தொகுதிகளை (இணைப் பிரதிகளில்) யாழ்ப்பாணம் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் எல்லா அலுவலக நாட்களிலும் அலுவலக நேரங்களிலும் இலவசமாகப் பார்வையிடலாம்.
7. பொறி வைத்த கேள்விகளைக் கொண்ட தபாலுறையில் இடது பக்க மேல் முலையில் "கல்வியங்காடு பொதுச்சந்தை புனரமைத்தல்" என எழுதப்படல் வேண்டும்.
8. பொறியிடப்பட்ட கேள்விகள் "தலைவர், யாழ். மாவட்ட கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் 2003.09.19 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாக எங்களுக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். அல்லது இதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டம். இதன் பின்னர் கேள்விகள் 2003.09.19 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விகள் இடுவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் இருவருக்கு மேற்படாமல் சமுகமளிக்கமுடியும்.
9. பொறியிடப்பட்ட கேள்விப் பெட்டி திட்டப் பணிப்பாளரின் அறையில் வைக்கப்பட்டிருக்கும்.

மாவட்டக் கேள்விச் சபை,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
04.09.2003.

(சி-1439)

*செ.பத்மநாதன்*
*தலைவர்,*
*மாவட்டக் கேள்விச்சபை*
*யாழ்ப்பாணம்.*

## முதலாம் ஆண்டு நிறைவையொட்டி

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்
நடாத்தும்

# பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி

***உயர்தரப் பிரிவு*** - (க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்கள்)

***தலைப்பு*** - '21 ஆம் நூற்றாண்டில் அறிவியலின் வளர்ச்சி'

முதலாம் பரிசு - ரூபா 3,000
இரண்டாம் பரிசு - ரூபா 2,000
முன்றாவது பரிசு - ரூபா 1,000

***கீழ்ப் பிரிவு*** - (க.பொ.த. சாதாரண தரமும் அதற்குக் கீழ் கற்பவர்களும்)

***தலைப்பு*** - 'சூழல் மாசடைதலைத் தடுப்பதில் நமது பங்கு'

முதலாம் பரிசு - ரூபா 3,000
இரண்டாம் பரிசு - ரூபா 2,000
முன்றாவது பரிசு - ரூபா 1,000

### நிபந்தனைகள்

✧ கட்டுரைகள் சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.
✧ கட்டுரைகள் அனுப்பும் போது பாடசாலையில் கற்கும் தரம் குறிப்பிடப்பட்டு, அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
✧ கட்டுரைகள் ஆகக் குறைந்தது 300 சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
✧ கட்டுரைகளைத் தேர்ந்தெடுப்பதில் நடுவர்குழுவினது ஆசிரியரின் முடிவே இறுதியானது.
✧ கட்டுரைகள் "நமது ஈழநாடு" 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

போட்டி முடிவுதிகதி - 10.09.2003

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

## ஓராண்டு நிறைவையொட்டி நடத்தப்படும்

# சிறுகதை, கவிதைப் போட்டிகள்

**சிறுகதை** – முதலாம் பரிசு - 6,000 ரூபா
இரண்டாம் பரிசு - 4,000 ரூபா
முன்றாவது பரிசு - 2,000 ரூபா

**கவிதை** – முதலாம் பரிசு - 6,000 ரூபா
இரண்டாம் பரிசு - 4,000 ரூபா
முன்றாவது பரிசு - 2,000 ரூபா

### நிபந்தனைகள்

✧ எழுதுபவரின் சொந்த ஆக்கமாக இருக்க வேண்டும். ஏற்கனவே பத்திரிகையிலோ, ஏனைய ஊடகங்களிலோ வெளிவராதவையாக இருக்க வேண்டும்.
✧ மொழிபெயர்ப்பு ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
✧ கதைகள் ஈழநாடு பத்திரிகையின் ஒரு பக்கத்துக்குள் அடங்குவதாக இருக்கவேண்டும். தட்டச்சில் பொறிக்கப்பட்டவையாக இருந்தால் 5 பக்கங்களுக்குள்ளும் கையால் எழுதப்பட்டதானால் 7 பக்கங்களுக்குள்ளும் இருத்தல் வேண்டும்.
✧ கதைகள், கவிதைகள் சமகால, சமூகப் பிரச்சினைகளை மையமாக வைத்து எழுதப்படல் வேண்டும்.
✧ ஆக்கங்கள் யாவும் 10.09.2003 ஆம் திகதிக்குள் "நமது ஈழநாடு" 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.
✧ நமது ஈழநாடு பத்திரிகையில் கடமைபுரிபவர்களோ, அவர்கள் குடும்பத்தவர்களோ இப்போட்டியில் பங்குபற்ற முடியாது.
✧ பரிசுக்குரிய ஆக்கங்களை தேர்வு செய்வது நடுவர் குழுவினதும், ஆசிரியரினதும் முடிவாகும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இடைக்கால நிர்வாகத்தின் மூலம் தீர்வு காண்பது ஏமாற்று வித்தை!

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினையின் தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு, இதற்கு இடைக்கால நிர்வாகசபை மூலமே. தீர்வு காண்பது எனக் கருதப்படுவது ஏமாற்றுவித்தை என்று, மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அதிகாரப் பரவலாக்கல் தமது கட்சியின் நோக்கம் என்று, அண்மையில் நடத்தப்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 52 ஆவது சம்மேளனக் கூட்டத்தின்போது - ஜனாதிபதி தெரிவித்த கருத்துகள் தொடர்பாக, நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலே வீரவன்ச தமது நிலைப்பாட்டை தெரிவித்தார்.

ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் ரீதியான அதிகாரப் பரவலாக்கலை, சிறிலங்கா சுதந்திரக் கட்சி நம்புவதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார். அத்துடன், தனிநாடுகோரும் ஒரு குழுவினருக்கு குறைந்தபட்சம் அரசியல் ரீதியிலான அதிகாரப் பரவலாக்கல் வழங்காமல், இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியுமென யாராவது கருதுவார்களானால், அது கேலிக்குரிய விடயமாக இருக்கும் என்று, ஜனாதிபதி குறிப்பிட்டார். இந்தக் கருத்து சம்பந்தமாகவே - விமல் வீரவன்ச பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறுவனை காணவில்லையென மனித உரிமை குழுவிடம் புகார்!

(வடமராட்சி)

வடமராட்சி அல்வாய் பகுதியில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவன் ஒருவன் காணாமற்போயுள்ளதாக, யாழ். மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது.

திருமலையிலிருந்து வந்து, அல்வாய் வடக்கு மாவிலங்கையடியில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்த தேவசகாயம் ஜேசுதாஸ் (வயது 13) என்ற சிறுவனே காணாமற்போயுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் 6 ஆம் திகதி முதல் காணாமல் போன இவர் பற்றிய தகவலைப் பெற்றுத்தருமாறு, சிறுவனின் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

# சிறுமியை ஏமாற்றி சங்கிலி அபகரிப்பு!

## மோட்டார் சைக்கிளில் வந்தோர் கைவரிசை

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், மூன்று வயதுச் சிறுமியின் சங்கிலி ஒன்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் ஆத்திசூடி வீதியில் நேற்றுப்பகல் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பிரஸ்தாப சிறுமி - தனது வீட்டின் முன்பாக நின்றபோது, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் - சிறுமியிடம் சங்கிலியைக் கழற்றித் தருமாறும், தாம் பின்னர் கொண்டுவந்து தருவதாகவும் கேட்டுள்ளனர். சிறுமியும் தனது சங்கிலியை கழற்றி கொடுக்கவே - அதனை பெற்றுக்கொண்ட இருவரும், அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளனர்.

# பயணிகள் சேவையில் ஈடுபடும் பஸ்களில் மும்மொழிகளிலும் விளம்பரைப் பலகை!

பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் வாகனங்களில்- வாகன சேவையில் ஈடுபடும் இடம், மூன்று மொழிகளிலும் குறிப்பிடப்பட வேண்டுமென, போக்குவரத்து நெடுஞ்சாலை அமைச்சர் திலக் மாரப்பன உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போது, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது -

தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலை அடுத்து, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் போக்குவரத்துச் சேவை அதிகரித்துள்ளது.

இதனால், போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்களில், தனிமொழி பிரயோகிக்கப்படுவதனால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனையைக் கருத்திற்கொண்டே, இந்த நடைமுறை அமுல்படுத்தப்படவுள்ளதாக, அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார். (01)

# தென்னிலங்கை அபிவிருத்திக்கு நோர்வே நூறு மில்லியன் உதவி

(கொழும்பு)

நோர்வே - தென்னிலங்கையின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு, நூறு மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

நேற்று நோர்வேத் தூதுவர் - ஹான்ஸ் பிரட்ஸ்கரும் தொழில் அமைச்சு சார்பில் ஹரி ரத்வத்தவும் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளனர்.

தென்னிலங்கையில்-மாத்தளை, காலி ஆகிய மாவட்டங்களிலுள்ள பெருந்தெருக்கள், கிராமிய பாதைகள் புனரமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (01)

## பெயர் மாறாட்டத்தினாலேயே

# போராளி கைதானதாக பொலிஸார் தெரிவிப்பு!

சுன்னாகம் பகுதியில் இடம் பெற்ற படுகொலைச் சம்பவத்தில் ஈடுபட்டதாகத் தேடப்பட்டுவரும் சந்தேக நபரினுடைய பெயரும், விடுதலைப் புலி உறுப்பினரின் பெயரும், ஒரேமாதிரி இருந்தமையாலேயே- போராளி கைது செய்ப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 2 ஆம் திகதி முகமாலை சோதனைச் சாவடியில் - புலி உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைது செய்யப்பட்ட மேற்படி போராளி, கைவிலங்கு இடப்பட்டு அவமதிக்கப்பட்டதாகவும், பொலிஸாரினால் பலவந்தமாக வாக்குமூலம் பெறப்பட்டதாகவும், யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி, கைதுசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக, நேற்று நடைபெற்ற விசாரணையின்போதே, அங்கு பிரசன்னமாயிருந்த கொடிகாமம் பொலிஸார் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

மேற்படி சம்பவத்தின்போது, விடுதலைப் புலி உறுப்பினர் கைதுசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக, பொலிஸ்மா அதிபரிடம் ஆலோசனையைப் பெறுவதுடன், மேற்படி போராளி மற்றும் பொலிஸாரை அழைத்து அடுத்த வாரம் விசாரணை நடத்துவதெனவும் முடிவுசெய்யப்பட்டது.(202)

# படையினரின் நடவடிக்கைகளினால் மன்னார், வவுனியா பேருந்து தாமதம்

(மன்னார்)

மன்னாரிலிருந்து வவுனியா செல்லும் பயணிகள் பேருந்துகள் படையினரின் நடவடிக்கைகளினால் தாமதமாவதை நிறுத்தக்கோரி, மன்னார் அரச அதிபருக்கு மகஜர் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளர் குமரேஸினால் இந்த மகஜர் நேற்று அனுப்பப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு முன்னர் மன்னாரிலிருந்து, வவுனியா செல்லும் பயணிகள் பேருந்துகள் மன்னார் - வவுனியா வீதியிலிருந்த சோதனைச் சாவடிகளில் மேற்கொள்ளப்படும் சோதனை நடவடிக்கைகளால் மூன்றுமணி நேரம் தாமதித்துச் செல்கின்றன.

ஆனால், புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னரும் கூட பேருந்துகள் மூன்றுமணி நேரம் தாமதித்தே செல்கின்றன.

மன்னார்- வவுனியா வீதியிலுள்ள படையினரின் முகாம்கள், சோதனைச் சாவடிகளிலுள்ள படையினர்- பேருந்துகளில் தமது பொதிகளையும் ஏற்றி, அருகிலுள்ள முகாம்களிலே இறக்குவதால் மூன்றுமணி நேரத்துக்கு மேல் தாமதித்தே செல்ல வேண்டியுள்ளது. படைத்தரப்பினரின் தேவையை நிறைவுசெய்ய பேருந்து சேவை இடம்பெற்று வருகின்றபோதும் மக்களின் போக்குவரத்துக்கான பேருந்துகளில் ஏன் பயணம் செய்கிறார்கள். இதனால் இவ்வாறான தாமதத்தை படைத்தரப்பு ஏற்படுத்துவதை உடனடியாக அரச அதிபர் தலையிட்டு நிறுத்தவேண்டும் என அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (201)

### எரிபொருட்களின்...

இருந்த சுப்பர் டீசல் - 36 ரூபா 80 சதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

லீற்றர் 24 ரூபாவாக இருந்த மண்ணெண்ணெயின் விலை - 25 ரூபாவாகவும், லீற்றர் 26 ரூபா 30 சதமாக இருந்த கைத்தொழில் பயன்பாட்டு மண்ணெண்ணெயின் விலை- 27 ரூபா 30 சதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (01)

### இடைக்கால....

சொந்தமான விசேட ஹெலிகொபரரில் கிளிநொச்சியிலுள்ள மத்திய விளையாட்டு மைதானத்தில் காலை 10.30 மணிக்கு வந்து இறங்கினர்.

இவர்களை விடுதலைப் புலிகளின் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் என பலரும் வரவேற்றனர்.

இதேவேளை, கேணல் கருணா தலைமையிலான குழுவினர் - கொழுமபிலிருந்து நேரடியாகவே விசேட ஹெலிகொப்டர் மூலம் மட்டக்களப்பைச் சென்றடைந்தனர்.

### இடைக்கால நிர்...

அரசால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகம் வரைவு குறித்துக் கலந்தாலோசித்த விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், அங்கிருந்து அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடனும் இது குறித்து விரிவாக ஆராய்ந்த பின்னர், நேற்றுக் காலை வன்னி திரும்பியுள்ளனர். இவர்கள் தலைவர் பிரபாகரனுடன் ஆலோசனைகளை நடத்தி, இறுதிநகலை நோர்வே அனுசரணையாளர்கள் மூலம் அரசிடம் கையளிப்பார்கள். அதைத் தொடர்ந்து பேச்சுக்கள் ஆரம்பிக்க வாய்ப்புள்ளது.

ஏற்கனவே தாய்லாந்து, நோர்வே, ஜப்பான், ஜேர்மனி ஆகிய நாடுகளில் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றுள்ளன. இன்னும் பல நாடுகள் தங்களது நாட்டில் பேச்சுவார்த்தைகளை நடத்த விருப்பமும் தெரிவித்திருக்கின்றன. தொடரப்போகும் அடுத்த கட்டப் பேச்சுக்களை, சூழ்நிலைக்கேற்ப வெவ்வேறு தளங்களில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

### படையினர்...

மறுக்கப்பட்டுள்ளது. இரவு வேளைகளில் குடியிருப்புப பகுதிகளுக்குள் வரும் படையினர் பற்றிய தகவலைத தமக்குத் தெரிவிக்குமாறும், அவ்வாறு தெரிவித்தால் படைச்சிப்பாயைக் கைதுசெய்து விசாரணை நடத்த முடியும் எனவும் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. (9,202)

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1543 திகதி: 02.09.2003

வெற்றி இலக்கங்கள்

| S | 2 | 0 | 9 | 3 | 3 | 2 |
|---|---|---|---|---|---|---|

(சி-1432)

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.25 | 96.20 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 150.62 | 152.27 |
| 1 யூரோ | 103.58 | 105.25 |
| 1 சுவிஸ் பிராங் | 67.50 | 68.70 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 61.25 | 62.40 |
| 1 ஜப்பானிய யென் | 00.82 | 00.83 |
| 1 சவூதி றியால் | 25.21 | 25.21 |



## இந்திய சாஸ்திரியார் வருகை

முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற

## S.N.குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும். (காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்

இல.711, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P. 077 - 6080660, 021 - 2226188
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)

(சி-1441)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.09.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.